بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 11

இதழ் 33

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1448 - 29 ஸஃபர்

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - ஸஹுர் 13 ★ ஆகஸ்ட் 13 2026

## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ اللّٰہَ یَاۡمُرُکُمۡ اَنۡ تُؤَدُّوا الۡاَمٰنٰتِ اِلٰۤی اَہۡلِہَا ۙ وَ اِذَا حَکَمۡتُمۡ بَیۡنَ النَّاسِ اَنۡ تَحۡکُمُوۡا بِالۡعَدۡلِ ؕ اِنَّ اللّٰہَ نِعِمَّا یَعِظُکُمۡ بِہٖ ؕ اِنَّ اللّٰہَ کَانَ سَمِیۡعًۢا بَصِیۡرًا (அந்நிஸா:59)

நீங்கள் அமானிதங்களை (நம்பி ஒப்படைப்பவற்றை) அவற்றிற்குத் தகுதியானவர்களிடமே ஒப்படைக்க வேண்டுமென்றும், நீங்கள் மக்களுக்கிடையில் தீர்ப்பு வழங்கும்போது நீதியுடன் தீர்ப்பு வழங்க வேண்டுமென்றும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான். அல்லாஹ் உங்களுக்கு அறிவுரை கூறுகின்றது எதுவோ அதுவே நிச்சயமாக சிறந்தது. நிச்சயமாக அல்லாஹ் நன்கு கேட்பவனும்,பார்ப்பவனுமாவான்.

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நபிமொழி

## அமானிதங்கள் வீணடிக்கப்படுவதைக் காணும்போது கியாமத்திற்கு காத்திருங்கள்

عَنۡ أَبِي هُرَيۡرَةَ رَضِيَ اللّٰهُ عَنۡهُ، قَالَ: قَالَ رَسُولُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيۡهِ وَسَلَّمَ: "إِذَا ضُيِّعَتِ الۡأَمَانَةُ، فَانۡتَظِرِ السَّاعَةَ". قَالَ: كَيۡفَ إِضَاعَتُهَا يَا رَسُولَ اللّٰهِ؟ قَالَ: "إِذَا أُسۡنِدَ الۡأَمۡرُ إِلَى غَيۡرِ أَهۡلِهِ فَانۡتَظِرِ السَّاعَةَ".

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அமானிதங்கள் வீணடிக்கப்படத் தொடங்கும் போது, நீங்கள் கியாமத்திற்கு காத்திருங்கள்.'

'அல்லாஹ்வின் தூதரே! அவை வீணகுவதன் பொருள் என்ன? என்று கேள்வி கேட்டவர் கேட்டார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

தகுதியற்றவர்கள் ஆட்சியாளர்களாக ஆக்கப்படும் போது, கியாமத்திற்காக காத்திருங்கள். (புஹாரி - கிதாபுல்-ரிகாக் - பாப் ரஃப் அல்-அமானா - ஹதீஸ் எண்: 6496)

ஹஸ்ரத் அபூ மூஸா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

முஸ்லிம்களின் செல்வங்களின் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்ட அந்த முஸ்லிம், அவர் நம்பிக்கைக்குரியவராகவும், நேர்மையாளராகவும்; அவருக்கு கட்டளையிடப்பட்டதை முழுமையாகவும் செயல்படுத்துகின்றார் என்றால், மேலும் எவருக்கு ஒன்றை கொடுக்கும்படி கட்டளையிடப்படுகின்றதோ அதனை மனநிறைவுடனும், மனமகிழ்ச்சியுடனும் அதனை கடமையாகக் கருதி கொடுக்கின்றார் என்றால், பின்னர் அத்தகைய நபரும் செயல் அளவில் தருமம் செய்யக் கூடியவரைப் போன்று தருமம் செய்தவராக கணக்கிடப்படுவார். (நூல்: ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுஸ் ஸக்காத் - நம்பிக்கையான பொருளாளரின் கூலி) * * * * * *

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்

## இறைவனின் அனைத்து அமானிதங்களையும் ஈமானிய உடன்படிக்கைகளையும் அதே போன்று அனைத்துப் படைப்பினங்களுக்கான அமானிதங்கள் மற்றும் வாக்குறுதிகளையும் இயன்ற வரை பேண வேண்டும்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

' அல்லாஹ் திருக்குர்ஆனில் இறையச்சத்தை ஆடை என்ற பெயரால் குறிப்பிட்டுள்ளான். ஆக, லிபாஸுத் தக்வா என்பது திருக்குர்ஆனின் சொல்லாகும். ஆன்மீக அழகும், ஆன்மீக அலங்காரமும் இறையச்சத்தினால் மட்டுமே உருவாகிறது என்பதன் பக்கமே இந்த விஷயம் சுட்டிக்காட்டுகிறது.

மேலும், மனிதன் இறைவனின் அனைத்து அமானிதங்களையும் ஈமானிய உடன்படிக்கைகளையும் அதேபோன்று அனைத்துப் படைப்பினங்களுக்கான அமானிதங்கள் மற்றும் வாக்குறுதிகளையும் இயன்ற வரை பேணுவதே இறையச்சமாகும். அதாவது அதன் நுட்பத்திலும் நுட்பமான அம்சங்களின் மீது தம்மால் இயன்ற வரை செயல்பட வேண்டும்.

அமானிதம் என்பதன் பொருள் என்னவென்றால், இறைவன் நல்கும் முழுமையான மனிதருடைய அந்த அனைத்து ஆற்றல்களும், அறிவும், ஞானமும், உயிரும், உள்ளமும், அச்சமும், நேசமும், கண்ணியமும், அந்தஸ்தும், அதாவது அனைத்து ஆன்மிக, பௌதீக அருட்கொடைகளும் ஆகும். பின்னர் சூரா அத்தலாக், 3-4 வரையிலான வசனத்திற்கு ஏற்ப அந்த அனைத்து அமானிதங்களையும் அவர் இறைவனின் சன்னிதானத்தில் திருப்பி ஒப்படைக்கின்றார். அதாவது அவனிடம் தம்மை மாய்த்துக் கொண்டு அவனது வழியில் தம்மை அர்ப்பணித்துக் கொள்கின்றார்............இந்த மேன்மை உயர்வாகவும், முழுமையாகவும், பரிபூரணமாகவும் நமது தலைவர், நமது எஜமானர், நமது வழிகாட்டி, படிக்காத உண்மையான நபி, மற்றும் உண்மைப்படுத்தப்பட்டவருமான முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடம் மட்டுமே காணப்பட்டது.

(ஆயினாயே கமாலாதே இஸ்லாம், பக்கம்: 161-162)

* * * * *   * * * * * *

## தஃப்ஸீரே கபீர்

## இந்த அமானிதம் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டால் அதில் நீங்கள் ஒருபோதும் நம்பிக்கைத் துரோகம் செய்யக் கூடாது

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (அலை) அவர்கள் சூரா அல்-முஃமினூனின் وَالَّذِیۡنَ ہُمۡ لِاَمٰنٰتِہِمۡ وَعَہۡدِہِمۡ رٰعُوۡنَ என்ற வசனத்திற்கு விளக்கம் அளித்தவாறு கூறுகின்றார்கள்:

ஸஹாபிகள் எத்தகைய அற்புதமான முன்மாதிரியைக் காட்டினார்கள் என்றால், கிறிஸ்தவர்களின் ஒரு தலைமையக நகரமாக 'ஹிம்ஸ்' இருந்தது. அது முஸ்லிம்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட்டது. அப்போது, அவர்கள் கிறிஸ்தவர்களிடமிருந்து லட்சக்கணக்கான ரூபாயை வரியாக வசூலித்து விட்டார்கள். ஆனால், ராணுவ உத்திகளின் கீழ் அவர்களுக்கு அந்த நகரத்தைக் காலி செய்ய நேரிட்டபோது, அவர்கள் அங்குள்ள பொறுப்புள்ள நபர்களை அழைத்து, அவர்களது முழுப் பணத்தையும் அவர்களிடம் திரும்பக் கொடுத்துவிட்டார்கள். மேலும் அவர்களிடம் கூறினர்:

நாங்கள் உங்களுடைய உயிரையும், உடைமையையும் பாதுகாப்போம் என்ற காரணத்திற்காகவே உங்களிடமிருந்து இந்த வரியைப் பெற்றோம். ஆனால் இப்போது சூழ்நிலைகள் ஆபத்தானதாக மாறுகின்றன; மேலும் நாங்கள் இந்த நகரத்தை விட்டு வெளியேறுகிறோம்; எனவே உங்கள் பணத்தை எங்களிடம் வைத்திருப்பதை நேர்மை மற்றும் அமானிதத்தின் விதிமுறைகளுக்கு எதிரானதாக நாங்கள் கருதுகிறோம். அதனால் லட்சக்கணக்கான ரூபாய் அவர்களிடம் திரும்பக் கொடுக்கப்பட்டு விட்டது.

இந்தச் சம்பவம் கிறிஸ்தவர்களின் இதயங்களில் எவ்வளவு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், முஸ்லிம்களின் ராணுவம் நகரத்தை விட்டு வெளியேறியபோது வழியனுப்பி வைப்பதற்காக இராணுவத்துடன் அவர்களும் உடன் சென்றனர் என்று வரலாறு கூறுகிறது. மேலும், அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது; இறைவன் உங்களை மீண்டும் எங்களிடம் கொண்டு வரட்டும்; உங்களைப் போன்ற நல்ல ஆட்சியாளர்களை நாங்கள் இன்று வரை கண்டதில்லை' என்று அவர்கள் கூறிக் கொண்டிருந்தனர். (ஃபுதூஹுல் பல்தான் - லில்பலாதுரி,

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்...

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

## அஹ்லே குர்ஆன் மற்றும் அஹ்லே ஹதீஸ் பிரிவினருக்கிடையிலான கருத்துவேறுபாடுகளும்

## நீதி நெறி தீர்ப்பவராக ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடைய ஈமானை வலுவூட்டக் கூடிய தீர்ப்பும்

இன்றைய நாட்களில் சவூதி அரேபியா சட்டம் இயற்றுதல் தொடர்பாக 'முத்தவாதிர்' ஹதீஸ்களைத் தவிர மற்ற அனைத்து ஹதீஸ்களின்படி அமல் செய்வதை சந்தேகத்திற்குரியதாகக் கருதியவாறு சவூதி அரேபியா அதனை நிராகரித்துவிட்டது என்ற செய்திகள் சமூக ஊடகங்களில் மிக அழுத்தமாக பரவி வருகின்றன. சில முஸ்லிம் முல்லாக்கள் அல்லது சமூக ஊடகங்களில் இருக்கும் அவர்களின் அடிவருடிகள், முஸ்லிம் பொது மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டுவதற்காகவும், மலிவான விளம்பரத்தைப் பெறுவதற்காகவும் இதுபோன்ற செய்திகளைப் பரப்பி வருகின்றனர். மேலும் அதில் முக்கியப் பங்காற்றுகின்றனர்.

உண்மை என்னவென்றால், சில ஆண்டுகளுக்கு முன்பு சவூதி அரசாங்கம் தனது பொருளாதார மற்றும் சமூக நிலையை மேம்படுத்துவதற்காக 'விஷன் 2030' என்ற திட்டத்தை வகுத்திருந்தது.எண்ணெய் வருமானம் மட்டுமின்றி வேறு என்னென்ன வழிமுறைகள் இருக்கின்றனவோ அவற்றில் தனது பொருளாதாரத்தை வலிமையான முறையில் நிலைநிறுத்த வேண்டும் என்பது அதன் அசலல் நோக்கமாக இருந்தது. அவற்றில் சுற்றுலா, தொழில்நுட்பத்தில் முதலீடுகளை அதிகரித்தல், புதிய நகரங்களின் கட்டமைப்பு மற்றும் பொழுதுபோக்கு மையங்களை உருவாக்குதல், பெண்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் அவர்களின் சுதந்திரத்திற்கான நடவடிக்கை போன்றவை அடங்கும். அவற்றில் சில மார்க்கச் சீர்திருத்தங்களும் இருக்கின்றன. அவற்றில் ஒன்று இதுவாகும். அதாவது, சட்டம் இயற்றுவதில் திருக்குர்ஆனுடன் முதவாதிர் ஹதீஸ்களிலிருந்து உதவி பெற வேண்டும்; மேலும் அஹாத் ஹதீஸ்கள் மற்றும் ஹதீஸே கபர் போன்ற ஹதீஸ்களுக்கு அதைவிடக் குறைந்த அந்தஸ்தில் இடம் அளிப்பதுமாகும்.

சவூதி அரேபிய அரசாங்கம் இது குறித்து என்ன அறிவித்துள்ளது? மேலும் எந்தவொரு விஷயத்தையும் பரப்பி மலிவான விளம்பரத்தைத் தேடக் கூடிய முல்லாக்கள் இது தொடர்பாக என்ன கூறுகின்றனர்? என இந்த அனைத்து விஷயங்களையும் விட்டு விட்டு, இப்பிரச்சினை தொடர்பாக காலத்தின் இமாம் ஸய்யிதுனா ஹஸ்ரத் மிர்ஸா அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் திருக்குர்ஆன், சுன்னத் மற்றும் ஹதீஸ்களின் மூலமாக வழிகாட்டுதல்கள் பெறுவது தொடர்பாக என்ன வழிகாட்டல் வழங்கியுள்ளார்கள்? என்று நாம் பார்ப்போம்!

உம்மத் எங்கெங்கெல்லாம் இடறலைச் சந்திக்கிறதோ அல்லது எங்கெங்கெல்லாம் வழிகாட்டுதலுக்கான தேவை உணரப்படுகிறதோ, அங்கு அன்னார் (அலை) அல்லாஹ்வின் அனுமதியுடன் வழிகாட்டியுள்ளார்கள்.

அன்னாரின் வாழ்நாளிலேயே 'அஹ்லே குர்ஆன்' என்ற பிரிவு உருவாகியிருந்தது. அந்த நாட்களில் அப்துல்லாஹ் சக்டால்வி ஸாஹிப் மற்றும் குலாம் அஹ்மத் பர்வேஸி ஸாஹிப் ஆகியோர் அதன் நிறுவனர்களாக இருந்தனர். இவர்கள் ஹதீஸ் ஆலிம்களுடன் ஒவ்வொரு நாளும் மார்க்க விவாதங்களில் ஈடுபட்டு வந்தனர். அந்த மார்க்க விவாதங்களில் ஒரு மார்க்க விவாதம் அப்துல்லாஹ் சக்டால்வி ஸாஹிப் மற்றும் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஸாஹிப் ஆகியோருக்கு இடையே 1902-ல் நடைபெற்றது. அப்துல்லாஹ் ஸாஹிப் அஹ்லே குர்ஆனாக இருந்தார். முஹம்மது ஹுஸைன் பட்டாலவி ஸாஹிப் அஹ்லே ஹதீஸ் பிரிவைச் சார்ந்தவராக இருந்தார். அப்துல்லாஹ் சக்டாலவி ஸாஹிப் மற்றும் அவரது ஆதரவாளர்கள் ஹதீஸ்களை ஏற்கவில்லை; திருக்குர்ஆனை மட்டுமே ஏற்பதாகக் கூறினர். மறுபுறம், அல்லாஹ்வின் வேதமான திருக்குர்ஆனின் நீதிபதியாக ஹதீஸ்கள் இருக்கின்றன என்பது முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் கொள்கையாக இருந்தது. இரு தரப்பினரும் மிகைப்படுத்துதல் மற்றும் குறைவு ஏற்படுத்துதல் என்ற நிலைகளை எட்டியிருந்தனர்.

இந்த விவாதம் குறித்து மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஒரு ரிவ்யூ எழுதினார்கள். அது 'ரூஹானி கஸாயின்' தொகுதி 19-ல் 'ரிவ்யூ பர் முபாஹஸா பட்டாலவி வ சக்டால்வி' என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களின் மகத்துவ மிக்க வழிகாட்டல்கள் குறித்து வழங்கியுள்ள வழிகாட்டல்கள் கீழே சமர்ப்பிக்கப்படுகின்றன. முஸ்லிம் ஆலிம்களுக்கும், அவர்களின் ஆட்சியாளர்களுக்கும் இந்த வழிகாட்டலானது பின்பற்றத் தக்கதாக உள்ளது.

அன்னார் (அலை) கூறினார்கள்:

'நீங்கள் நேர்வழி பெறும்பொருட்டு இறைவன் உங்களுக்கு இந்த மூன்று விஷயங்களை வழங்கியுள்ளான். முதல் விஷயம், திருக்குர்ஆன். நேர்வழிக்கான இரண்டாவது வழிமுறை சுன்னத் ஆகும். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது செயலால், அமலால் திருக்குர்ஆனை நடைமுறைப்படுத்திக் காட்டித் தந்த அந்த தூய முன்மாதிரியாகும். உதாரணமாக, இவ்வாறு தொழ வேண்டும் என்று தொழுது காட்டினார்கள். தாமே நோன்பு நோற்று இவ்வாறு நோன்பு நோற்க வேண்டும் என்று காட்டினார்கள். இதன் பெயர் சுன்னத் ஆகும். அதாவது இறைவனின் கூற்றை செயல் வடிவில் காட்டித் தந்து கொண்டிருந்த இறைத் தூதரின் நடைமுறை. இதன் பெயரே சுன்னத் ஆகும்.

நேர்வழிக்கான மூன்றாவது வழிமுறை ஹதீஸ் ஆகும். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அன்னாரின் கூற்றுகள் ஒன்று திரட்டப்பட்டது. ஹதீஸ்களின் அந்தஸ்து என்பது திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தின் அந்தஸ்தை விட அந்தஸ்தில் குறைந்ததாகும். ஏனெனில் பெரும்பாலான ஹதீஸ்கள் ஊகத்தின் அடிப்படையில் அமைந்தவையாகும். ஆனால், அவை திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்துடன் ஒத்துப்போனால், அவை அதனை நம்பிக்கைக்குரியதாக ஆக்கிவிடும்.' (கிஷ்தீ நூஹ், பக்கம் 33-34, வெளியீடு: நஸாரத் நஷ்ர் வ இஷாஅத் காதியான், 2018).

அந்த வழிகாட்டல் குறித்து ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மேற்குறிப்பிட்ட இரு ஆலிம்கள் நிகழ்த்திய மார்க்க விவாதத்தை குறித்து வழங்கிய ரிவ்யூவில் இவ்வாறு கூறினார்கள்:

அசல் விஷயம் என்னவென்றால், இந்த இரு தரப்பினரில் ஒருவர் மிகையான (வரம்பு மீறலான) வழியைத் தேர்ந்தெடுத்துள்ளார். மேலும் மற்றொருவர் தஃப்ரீத் (எனும் ஆகுமற்ற) குறைவு செய்தல் என்ற வழிமுறையை மேற்கொண்டுள்ளார். முதல் தரப்பு, அதாவது முஹம்மது ஹுஸைன் அவர்கள், ஹதீஸே மர்ஃபூ மற்றும் முத்தஸிலா போன்றவற்றை வீணானவையாகவும், குப்பையாகவும் கருதக் கூடாது என்ற விஷயத்தில் உண்மையாளர் ஆவார். இருந்தபோதிலும், அவர் படித்தரங்களை பேணுதலுக்கான விதிமுறைகளை மறந்து ஹதீஸ்களின் அந்தஸ்தை எந்த அளவிற்கு உயர்ந்த மினாராவில் ஏற்றுகின்றார் என்றால், அதனால் திருக்குர்ஆன் அவமரியாதை செய்யப்படுகின்றது. மேலும் அதனால் அதனை நிராகரிக்க நேரிடுகின்றது. இது மிகத் தெளிவான குற்றமாகும். மேலும் நீதியின் எல்லைகளை தாண்டிச் செல்வதாகும். கம்பீரமும் மேன்மையும் மிக்க அல்லாஹ் கூறுகின்றான்:

فَبِاَيِّ حديثٍ بعد الله و اٰياته يُؤمنون

அல்லாஹ்வின் வசனங்களுக்குப் பிறகு எந்த ஹதீஸை இவர்கள் நம்பப் போகிறார்கள்?'.

மறுபுறம், இவருடைய எதிர் தரப்பு மவ்லவி அப்துல்லாஹ் சக்டால்வி ஸாஹிப் ஹதீஸ்களை முற்றிலுமாக நிராகரிக்கக் கூடிய வரம்பு மீறுதலின் வழியில் அடியெடுத்து வைத்துள்ளார். ஹதீஸ்களை நிராகரிப்பது என்பது ஒருவகையில் திருக்குர்ஆனை நிராகரிப்பது ஆகும். ஏனெனில் அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்: .

قُلْ ان كنتم تحبون الله فاتبعونى يُحْبِبْكُمُ الله

அல்லாஹ்வை நேசிப்பீர்களானால் என்னைப் பின்பற்றுங்கள்' -

எனவே, அல்லாஹ்வின் மீதான அன்பு என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான அன்பைச் சார்ந்துள்ளது. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயல் முன்மாதிரிகளை அறிந்து கொண்டு அதனை பின்பற்றுவதற்கு ஹதீஸ்களும் ஒரு வழிமுறையாகும். எனவே, யார் ஹதீஸை விட்டுவிடுகிறாரோ, அவர் அந்தப் பின்பற்றும் வழியையும் விட்டுவிடுகிறார்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், முஹத்திஸ்கள் (ஹதீஸ் கலை அறிஞர்கள்) மற்றும் அவர்களின் சீடர்களின் வழிமுறையிலிருந்து விலகி, ஹதீஸை எடைபோடுவதற்கான வழிமுறையாக இதனைக் கூறியுள்ளார்கள். அதாவது. அதன்படி, எந்த ஹதீஸ் திருக்குர்ஆனிற்கு ஏற்புடையதாக இருக்குமோ, அது எவ்வளவுதான் பலவீனமானதாக இருந்தாலும் சரியே அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அதேநேரம் ஒரு ஹதீஸ் எவ்வளவு நம்பகமானதாகவும் அல்லது தொடர்ச்சியானதாகவும் இருந்தாலும் சரியே அது திருக்குர்ஆனின் தெளிவான போதனைக்கு முரணாக இருந்தால், முதலில் அதன்

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்.....

# ஜுமுஆ பேருரை

**இறைக் கட்டளை மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை பேணுதல்**
**தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சம்பவங்கள்**
**ஏழைகளின் நலன் மற்றும் தாராள குணம்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 26 ஜீன் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **26 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۝

مٰلِكِ يَوْمِ الدِّينِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۝

صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّينَ ۝

அல்லாஹ்வின் கட்டளையின்படியும், மாநபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படியும் செயல்பட்டு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம் வாழ்வில் கடைபிடித்த ஏழைகளைப் பேணுதல் மற்றும் வள்ளல் தன்மை ஆகியவற்றின் பல நிகழ்வுகளும் நமக்குக் கிடைக்கின்றன. அன்னார் (அலை) வாதம் புரிந்ததற்குப் பிறகிலிருந்து மட்டுமல்ல; மாறாக, அன்னாரது வாழ்வின் தொடக்கப் பருவம் மற்றும் இளமைப் பருவத்திலும் நமக்கு அன்னாரது உயர் நல்லொழுக்கங்களின் நிகழ்வுகள் கிடைக்கின்றன. இவ்வாறே அல்லாஹ் அன்னாரை எந்தத் தாயின் மடியில் வளரச் செய்தானோ அவர்களுடைய வாழ்வையும் நாம் பார்க்கும்போது, அங்கும் நமக்கு ஏழைகளைப் பேணுதல் மற்றும் வள்ளல் தன்மையின் நிகழ்வுகள் கிடைக்கின்றன. ஆக, அன்னார் எத்தகைய ஒரு தாயின் மடியில் வளர்ந்தார்கள் என்றால், அவர்கள் அன்னாருக்கு உயர் நல்லொழுக்கங்களையும் கற்றுக் கொடுத்தார்கள். இவ்வாறு அல்லாஹ் அன்னாருடைய இயல்பில் தானே நன்மையை உருவாக்கிய அதே வேளையில், அன்னாருக்குத் தம் தாயாரிடமிருந்தும் நல்ல சூழல் கிடைக்கப் பெற்றது.

இந்த வகையில், அன்னாருடைய தாயாரின் இந்த வள்ளல் பண்பு பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் மாயீ சிராக் பீபீ சாஹிபா அவர்களுடைய குடும்பம், அதாவது, ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் தாயார் அவர்களுடைய குடும்பம் ஹோஷியார்பூர் மாவட்டத்தில் உள்ள ஆயிமா எனும் இடத்தில் உண்மையான மரபு வழியைச் சேர்ந்த, ஒரு கண்ணியமான முஹாலாயக் குடும்பம் ஆகும். அவர்களுடைய இயல்பில் வள்ளல் பண்பும், விருந்தோம்பலும் நிறைந்து இருந்தது. மான உணர்வும், ஒழுக்கமும் கொண்ட ஒரு பெண்மணியிடம் இருக்க வேண்டிய உயர்ப் பண்புகள் அன்னாரிடம் இருந்தன. அவர்கள் எப்பொழுதும் சிரித்த முகமாகவும், அமைதியாகவும் இருப்பார்கள். விருந்தோம்பலுக்கு அவர்களுடைய உள்ளத்தில் பெரும் எழுச்சியும், இதயத்தில் தாராள மனப்பாண்மையும் இருந்தது. அவர்களுடைய கொடையளித்தல் மற்றும் விருந்தோம்பலைக் கண்ட மக்களில் சிலர் இப்பொழுது உயிருடன் இருக்கிறார்கள். ஹஸ்ரத் மவ்லவி யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் இதை எழுதிக் கொண்டிருக்கும்போது, அவர்கள் இப்பொழுது வரை உயிருடன் இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். அந்த (மக்கள்) கூறுகிறார்கள்: (தாயார்) அவர்களுக்கு நான்கு பேருக்கு உணவு வேண்டும் என்ற தகவல் கிடைத்தால், நான்கு பேர் விருந்தினர்கள் வந்திருக்கிறார்கள் என்றால், உள்ளேயிருந்து உணவு செல்லும்போது, வேறு யாராவதும் வந்து பக்கத்தில் உட்கார்ந்து கொண்டால், அவர்களும் சாப்பிட்டுக் கொள்ளட்டும்! என்று எட்டுப் பேருக்கானதை விட அதிகமாக அனுப்புவார்கள். விருந்தினர்கள் வருவதனால் அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.

பிறகு, அவர்கள் எழுதுகிறார்கள்: தமது நகரத்தின் ஏழை, இயலாதோர் மீது குறிப்பாக அக்கறை காட்டுவார்கள். ஏழைகள் குடும்பத்தில் இறந்தவர்களுக்கு இவர்களிடமிருந்து கஃபன் துணி கிடைத்து வந்தது. இது இவர்களுடைய வழக்கத்தில் இருந்த ஒரு சிறப்பான விஷயமாகும். ஏழை மனிதர் யாராவது இறந்து விட்டால், அவரது கஃபன் துணி மற்றும் நல்லடக்கத்துக்கான ஏற்பாடு செய்வார்கள். சுருக்கமாக, ஏழைகள் மீது அனுதாபம் காட்டியதனாலும், அவர்களைக் காத்ததனாலும் அவர்கள் அனைவருக்கும் ஒரு விதத்தில் கருணையுள்ள தாயாராக திகழ்ந்தார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குக் கிடைத்த தர்பிய்யத்தில் கண்ணியத்திற்குரிய தாயார் அவர்களின் இந்தப் பண்புகளும், நல்லொழுக்கங்களும் சிறப்பான தாக்கத்தை உண்டாக்கின. ஹுஸுர் (அலை) அவர்கள் ஒரு மாபெரும் குடும்பத்தின் எஜமானர் ஆக இருந்தார்கள். எனவே, அல்லாஹ் துவக்கத்தில் இருந்தே, அந்த உயர்ப் பண்புகளை உருவாக்குவதற்காக அன்னாருக்கு இந்த ஏற்பாட்டைச் செய்தான். அதாவது, பொது மக்கள் மீது அனுதாபம் காட்டுதல், விருந்தோம்பல் மற்றும் வள்ளல்தன்மை ஆகியவற்றில் தமக்கு நிகர் தாமாகவே இருந்த அத்தகைய ஒரு பரிவுள்ள தாயாரின் மடியில் அன்னாரை வைத்தான். இவ்வாறு ஒருவகையில், அன்னார் (அலை) இந்த நற்பண்புகளை தாய்ப் பாலுடன் அருந்தினார்கள். தேவையற்றவராக இருத்தல், வீரம், துணிவு, உண்மையைப் பேசுதல் ஆகியவை அன்னாருக்கு கண்ணியத்திற்குரிய தந்தையாரிடமிருந்து கிடைத்திருந்தன என்றால், விருந்தோம்பல், வள்ளல் குணம் மற்றும் பொது மக்களிடம் அனுதாபம் காட்டுதல் ஆகியவை கண்ணியத்திற்குரிய தாயார் அவர்களிடமிருந்து கிடைத்திருந்தன. (ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்களின் நூல் ஹயாத்தே அஹ்மது, பாகம் 1, பக்கம் 217 - 218)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது இளமைப் பருவத்தில் அன்னார் (அலை) தான தர்மங்கள் செய்ததற்கான நிகழ்வுகள் கிடைக்கின்றன. இது தொடர்பாக ஹஸ்ரத் மியான் அல்லாஹ் யார் சாஹிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹுஸுர் (அலை) அவர்கள் சியால்கோட்டில் ஊழியராக இருந்த காலத்தில் ஒருமுறை ஹுஸுர் அவர்களுக்காக, ஹுஸுர் அவர்களின் தாயார் இரண்டு ஜோடி உடைகளையும், சிறிது பின்னியா (ன்) எனும் லட்டுகளையும், மங்கல் ஹஜாம் எனும் ஒரு நபரிடம் கொடுத்து அனுப்பினார்கள். மங்கல் திரும்பி வரும்போது, எங்கள் கிராமத்தைத் தாண்டிச் சென்றார். மியான் அல்லாஹ் யார் சாஹிப் கூறுகிறார்கள்:- அவர் திரும்பி வந்தபோது எங்கள் கிராமத்தைக் கடந்து சென்றார். அவர் எங்களிடம் சொன்னார்: நான் இந்தப் பொருள்களை எடுத்துக் கொண்டு சியால்கோட்டுக்குச் சென்றேன். ஹுஸுர் (அலை) அவர்களுக்கு முன்னால் வைத்து விட்டபோது, ஹுஸுர் அவர்கள், உனது பங்கில் வருவதை நீ எடுத்து கொண்டு, எனது பங்கை எனக்குக் கொடுத்து விடு!என்று கூறினார்கள். அதற்கு நான், இவை தங்களுக்குத்தான்; தாயார் அவர்கள், அம்மா ஜான் அவர்கள் தங்களுக்காக அனுப்பியுள்ளார்கள் என்றேன்.

அதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தாயாரை சொல்கிறார்.

அதற்கு அன்னார் (அலை), நீ இவ்வளவு தூரம் சுமந்து வந்திருக்கிறாய்; இந்த எல்லாப் பொருள்களிலும் சரி பாதியை நீ உனது பங்காகக் கண்டிப்பாக எடுத்துக்

கொள்! என்று கூறினார்கள். இவ்வாறாக, ஒரு ஜோடி உடையையும், சிறிது லட்டுகளையும் எனக்கு வழங்கி விட்டார்கள்.

பிறகு, நீ அம்மா ஜான் அவர்களிடம் சென்று என்னை இங்கிருந்து உடனடியாகத் திருப்பி அழைத்துக் கொள்ளுமாறு சொல்!; எனக்கு இங்கு இருக்க மனமில்லை; மக்கள் தகாத செயல்களில் வாழ்க்கையைக் கழிக்கிறார்கள். அவர்களைப் பார்த்து என் உள்ளம் வாடுகிறது என்று அன்னார் (அலை) கூறினார்கள். (ரிவாயத்தே அஸ்ஹாபே அஹ்மது, பாகம் 2, பக்கம் 230)

ஹஸ்ரத் ஸய்யித் ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஃ ஸாஹிப் அவர்களது மேற்கோளைக் கொண்டு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் சியால்கோட்டில் இருந்த போது, அங்கு எனக்கு ஃபஸ்ல் தீன் சாஹிப் அவர்களின் மகள் மாயீ ஹயாத் பீபீ சாஹிபா அவர்களை சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் ஹஸ்ரத் காரீ ஹாஃபிஸ் முஹம்மத் ஷஃபீ சாஹிப் அவர்களின் தாயார் ஆவார்கள். மாயீ ஸாஹிபா கூறினார்கள்: முதலில் மிர்ஸா சாஹிப் அவர்கள் இதே பகுதியில் ஒரு மேல்மாடி அறையில் வாழ்ந்து வந்தார்கள். அது நம்முடைய தற்போதைய வீடான ஜஹண்டா வாலாவோடு சேர்ந்திருந்தது. அந்த வீடு இடிந்து விழுந்ததும், மிர்ஸா ஸாஹிப் அவர்கள் காஷ்மீரீ எனும் பகுதியில் இருந்த என் தந்தையார் வீட்டுக்குச் சென்று விட்டார்கள். (மாயீ சாஹிபா) கூறுகிறார்கள்: எங்கள் வீட்டில் வந்தபோது நான் பார்த்திருக்கிறேன், அன்னார் வீட்டில் யாரையும் சந்தித்துப் பேச மாட்டார்கள். அவர்கள் இதையும் கூறியுள்ளார்கள்: மிர்ஸா ஸாஹிப் அவர்கள் கொண்டு வரும் சம்பளத்தை அந்தப் பகுதியின் கணவரை இழந்தவர்கள் மற்றும் தேவையுடையவர்களுக்குப் பகிர்ந்தளித்து விடுவார்கள். உடைகள் தயாரிக்கச் செய்து வழங்குவார்கள் அல்லது ரொக்கப் பணம் வழங்குவார்கள். தமக்காக உணவுக்கான செலவை மட்டும் வைத்துக் கொள்வார்கள்.

ஹஸ்ரத் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

கொடை மற்றும் வள்ளல் பண்பு தொடர்பாக நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்நாளைப் பார்க்கும் போது, நம் கண் முன் நிகழ்ந்த அந்த நிகழ்வுகள் மற்றும் நிலைமைகள் மீது பார்வையை செலுத்தும் போது, அன்னாருக்கு அந்த மாபெரும் பண்பின் பெரும் பகுதி வழங்கப்பட்டிருந்தது என்பது தெரியவருகிறது. அன்னாருக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து, அந்த நேரத்திலிருந்தே, அதாவது, முற்றிலும் குழந்தைப் பருவம் மற்றும் இளமைப் பருவத்திலிருந்து இந்த செயல் முறை அன்னாரது வாழ்வில் காணப்படுகிறது. அதுவன்றி, இறைவனால் நியமிக்கப்பட்ட பிறகு, ஏதேனும் பகட்டினால் இது போன்ற நற்பண்புகள் அன்னாரிடமிருந்து வெளிப்பட்டன என்பதல்ல. மாறாக, அன்னாருடைய இயல்பின் ஓர் அங்கமாக இது இருந்தது. இது போன்ற நற்பண்புகள் சிலவேளை முற்றிலும் மறைவாக இருக்கும். சிலவேளை பிறருக்குத் தெரிந்து விட வேண்டும் என்பதற்காக, அந்த வகையிலும் அவை இயற்கையாக வெளிப்பட்டு விடும். மறைவாக இருக்க வேண்டும் என்பதன் பக்கமே அன்னாரது பொதுவான கவனம் இருந்தது. அன்னார் (அலை) ஏதேனும் நன்மை செய்தார்கள் என்றால், அது மறைவாக இருக்க வேண்டும் என்று நினைத்தார்கள். எனவே, வாழ்வின் தொடக்க காலகட்டத்தின் கொடை நிகழ்வுகள் பொதுவாக மறைவாக இருக்கும். ஏனென்றால், அன்னார் (அலை) ஒரு தனிமை விரும்பியாக இருந்தார்கள். மறைவாக அன்னார் (அலை) சிலருடன் அந்த நேரத்தின் நிலைமைக்கு ஏற்றவாறு நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். ஆனால், அல்லாஹ் அன்னாரைப் பொது வாழ்வுக்குக் கொண்டு வந்ததும், தன் புறமிருந்து நியமித்ததும், மக்கள் வந்து போதல் மிகுதியாக ஆகத் துவங்கியதும் அன்னாரது நிலைமைகள் பொதுவாகத் தெரியத் துவங்கின. எனவே, அந்த நிகழ்வுகளைப் பார்ப்பவர்களும், எடுத்துரைப்பவர்களும் கூட தோன்றி விட்டனர். இவர்கள் எழுதுகிறார்கள்: அன்னார் இரவலர்களுக்கு, தானம் கேட்டு வருபவர்களுக்கு ஒருபோதும் மறுத்ததில்லை.

அன்னாருடைய வாழ்க்கை என்பது (உம்மிடம்) உதவி கேட்டு வருபவர்களை நீர் கடிந்து கொள்ளாதீர் என்ற இறை வசனத்தின் ஒரு செயல் வடிமாக இருந்தது.

ஹஸ்ரத் மவ்லானா அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒருநாள் அஸ்ர் தொழுகைக்குப் பிறகு அன்னார் வழக்கம்போல் எழுந்து, உள்ளே செல்வதற்காக பள்ளியின் ஜன்னலில் காலை வைத்தார்கள். இதற்குள் ஓர் இரவலர் மெல்லிய குரலில் நான் தானம் கேட்பவன் வந்துள்ளேன் என்று கூறினார். ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களுக்கு அப்பொழுது ஒரு முக்கியமான வேலையும் இருந்தது. அவரது குரலும் கொஞ்சம் மற்றவர்களின் குரலோடு கலந்து போனது. ஏனெனில், மக்கள் தொழுகைக்குப் பிறகு எழுந்து வழக்கத்தின்படி ஒருவர் மற்றவரிடம் ஏதாவது பேசுவார்கள்.

சுருக்கமாக, ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் உள்ளே சென்று விட்டார்கள். அதாவது, தெரியாமல் போனதால் அவர் பக்கம் கவனம் செலுத்தாமல் உள்ளே சென்று விட்டார்கள். குரல் லேசாக காதில் விழுந்திருந்தாலுமே, அன்னாருடைய மற்ற மும்முரமான பணிகள் சிந்தனையில் இருந்தன. எனவேதான் அன்னார் (அலை) கவனம் செலுத்தாமல் சென்று விட்டார்கள்; திரும்பி பார்க்கவில்லை. ஆனால், கீழே சென்றதும், காதில் விழுந்த அதே மெல்லிய குரல் தனது தெளிவான தாக்கத்தை அன்னரது உள்ளத்தில் ஏற்படுத்தியது. ஆனால், உள்ளே சென்றபிறகு, இப்படி ஏதோ குரல் எனக்குக் கேட்டதே! நான் தானம் கேட்பவன் வந்துள்ளேன் என்று யாரோ ஒருவர் சொன்னாரே! என்று அன்னாருக்குத் தோன்றியது. இது அன்னாரது உள்ளத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அன்னார் (அலை) உடனடியாக திரும்பி வருகை தந்தார்கள். கலீஃபா நூருத்தீன் சாஹிப் அவர்களிடம் ஓர் இரவலர் இருந்தார் அவரைப் பாருங்கள்! என்றார்கள். இரவலர் இருந்தாரே! எங்கே சென்றார்? என்றார்கள். அந்த இரவலர் ஹுஸூர் (அலை) அவர்கள் சென்ற பிறகு, போய் விட்டார். கலீஃபா சாஹிப் எல்லா இடங்களிலும் தேடினார். ஆனால், எங்கே? என்று தெரியவில்லை. இந்த கலீஃபா நூருத்தீன் ஸாஹிப் அவர்கள் காஷ்மீரைச் சேர்ந்த ஒரு நண்பர் ஆவார்.

எவ்வாறாயினும், கூறுகிறார்கள்: மாலையில் வழக்கப்படி தொழுது விட்டு அமர்ந்திருந்தோம். அப்பொழுது அதே இரவலர் மீண்டும் வந்து விட்டார்; தானம் கேட்டார். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் மிக விரைவாக ஜேபிலிருந்து ஏதோ எடுத்தார்கள். அவர் கையில் வைத்து விட்டார்கள். இப்பொழுது ஏதோ ஒரு சுமை தலையிலிருந்து இறங்கி விட்டது போன்று அன்னார் (அலை) மகிழ்ச்சியடைந்ததாகத் தெரிந்தது.

சில நாள்களுக்குப் பிறகு அன்னார் (அலை) அதைப் பற்றி இவ்வாறு கூறினார்கள்: அன்று அந்த இரவலர் கிடைக்காத போது, எனது உள்ளத்தில் எப்படிப்பட்ட சுமை இருந்தது என்றால், அது என்னை மிகவும் நிம்மதியிழக்கச் செய்திருந்தது. நான் இரவலர் பக்கம் கவனம் செலுத்தாமல், அப்படியே விரைவாக உள்ளே சென்று விட்டேன். நான் குற்றமிழைத்து விட்டேன் என்று நான் அஞ்சிக் கொண்டிருந்தேன். அல்லாஹ்வுக்கு நன்றி! அவர் மாலையில் திரும்பி வந்து விட்டார். இல்லையெனில், நான் எந்த அளவு நிம்மதியின்மையில் மூழ்கியிருந்திருப்பேன் என்பதை இறைவனே நன்கறிவான். அல்லாஹ் அவரைத் திரும்பக் கொண்டு வர வேண்டும் என நான் துஆவும் செய்தேன்.

இவ்வாறே ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் தமது வாழ்க்கை வரலாற்றில் ஓரிடத்தில் எழுதுகிறார்கள்: காதியானுக்கு அருகில் சட்(ஹ்)யாலீ என்ற ஒரு குக்கிராமம் உள்ளது. அது காதியானிலிருந்து ஏறத்தாழ 6 மைல் தொலைவில் இருக்கும். அங்கிருந்து ஜாட் இனத்தைச் சேர்ந்த இரவலர் ஒருவர் வருவார். அவரைப் பார்த்தவர்கள் பலர் இப்பொழுது உயிருடன் இருக்கிறார்கள். அவர் முபாரக் பள்ளிவாசலின் கூரையின் கீழ் வந்து ஜன்னலுக்கு அருகே குரல் கொடுப்பார். அது பைத்துல் ஃபிக்ரின் மேற்கு பக்க சுவற்றில் உள்ள ஜன்னலாகும். குலாம் அஹ்மத்! ஒரு ரூபாய் வாங்க வந்துள்ளேன் என்று அவர் குரல் கொடுப்பார். அங்கே உட்கார்ந்து கொள்வார். ஹஸ்ரத் சாஹிப் சில வேளை ஏதாவது பணியில் மூழ்கியிருப்பார்கள். அவர்கள் அதில், அந்தப் பணியில் கவனம் செலுத்திக் கொண்டிருப்பார்கள். அன்னாரால் அவரது குரலைக் கேட்க முடியாமல்

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

போனால், அவர் கொஞ்ச கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, குரல் கொடுத்துக் கொண்டே இருப்பார். இவர் என்ன இங்கே உட்கார்ந்து கொண்டு ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறாரே! என்று பெரும்பாலான மக்களுக்கு இது வெறுப்பாக இருந்தது. யாராவது அவரைத் தடுத்தால், நான் என்ன உங்களிடமா வந்துள்ளேன்; நானோ குலாம் அஹ்மது (அலை) அவர்களிடம் கேட்கிறேன்! என்று அவர் கூறுவார். யாராவது அவரை ஏதாவது சொல்லியதாக ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்குத் தெரியவந்தால், அன்னார் அதை விரும்ப மாட்டார்கள். சிரித்துக் கொண்டே அவருக்கு ரூபாய் கொடுத்து விடுவார்கள். இரவலரை வெகு நேரம் காக்க வைக்காமல் இருப்பதும் அன்னாரது ஒரு வழக்கமாக இருந்தது.

ஹஸ்ரத் சௌத்ரீ அப்துல்லாஹ் கான் சாஹிப் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை நடைப்பயிற்சி முடிந்து திரும்பி வரும்போது, ஹுஸுர் (அலை) அவர்கள் வீட்டுக்குள் நுழையச் சென்ற போது, கோவணம் அணிந்திருந்த ஓர் ஏழை மனிதர் குரல் கொடுத்தார்.

அவர் ஃபகீர் ஆவார். சிலர் எங்களிடம் உடையே இல்லை என்று சொல்வது போன்ற உடை அணிந்திருப்பார்கள். இதுவே அவர்களுக்கு ஒரு போராட்டமாக இருக்கும். எவ்வாறு இருப்பினும், அவர்கள் கூறுகிறார்கள்: அவர், (பஞ்சாபி மொழியில்) தாதா தாதா (அதாவது, அருளுபவரே! அருளுபவரே!) ஏதாவது வழங்கிடுங்கள் என்றார். ஹுஸுர் (அலை) அவர்கள் அல்லாஹ்வே! தாதா ஆவான் என்று கூறினார்கள். இதைக் கூறிவிட்டு உள்ளே சென்று விட்டார்கள். அவர் அருளுபவர் என்று சொல்லியிருந்தார். ஹுஸுர் (அலை) அவர்கள் அல்லாஹ் அருளுபவன் ஆவான் என்று கூறினார்கள். அவர், அருளுபவன் அல்லாஹ்வே ஆவான். தாங்கள் ஏதாவது வழங்கிடுங்கள் என்று மீண்டும் குரல் கொடுத்தார். ஹுஸுர் (அலை) அவர்கள் அவருக்கு ஏதோ அனுப்பி வைத்து விட்டார்கள்.

எவ்வாறாயினும், இந்த விஷயத்தினால் அவருக்கு என்ன தர்பிய்யத் கிடைக்க இருந்தது! ஆனால், இந்தக் கூற்றினால் அன்னார் (அலை) தம்மவர்களுக்கு, நம்முடைய பேச்சுக்களில் ஷிர்க்கிற்கான சிறிதளவு சுவடு கூடத் தென்படக் கூடாது என்று பாடம் வழங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: ஒருமுறை ஓர் இரவலர் வந்தார். அவர் காதியானில் கவிதைப் பாடி சுற்றித் திரிந்தார். அதாவது, கிராமங்களில் வீதிகளில் நஸ்மின் கவிதை வரிகளைப் பாடி சுற்றித் திரிபவர். அவர் காலையில் எழுவார், ஹஸ்ரத் மீர் ஹாமித் ஷாஹ் சாஹிப் மர்ஹூம் அவர்களின் இந்த நஸ்மைப் பாடுவார் (கவிதை வரியின் பொருள்):

என் காதியான் மக்களே! இறைவன் உங்களுக்கு உதவியாளன் ஆகி விட்டான்.

தாருல் அமானில் இருப்பவர்களே! நீங்கள் எமக்குப் பாதுகாப்பை வழங்கியுள்ளீர்.

எவ்வாறாயினும், இதை அவர் பாடி வந்தார். சில நேரத்தில் இந்தக் கவிதை வரியையும் பாடி விடுவார்: அதாவது, நாம் எல்லாப் பக்கமும் சிந்தனையை ஓட வைத்து களைப்படையச் செய்தோம்! என்ற ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பாடலைப் பாடி வந்தார். காதியான் முழுவதும் சுற்றி வருவார். அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதை வரிகளான இரண்டாவது பாடலைப் பாடும்போது, மக்தூமல் மில்லத் (சமுதாயத் தொண்டர்) ஹஸ்ரத் மவ்லானா மவ்லவி அப்துல் கரீம் ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு கடும் வெறுப்பாக இருக்கும். அவர்கள் இவ்வாறு கூறி வருவார்கள்: இவர் இந்த நஸ்மைப் பாடுவதற்கு உரியவர் இல்லை. ஏனென்றால், இந்த நஸ்ம் ஓர் உண்மைத்துவமும், நிலைப்பாடும் ஆகும். இதில் பெரும் ஆழம் உள்ளது. அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் மட்டுமே காணப்படுகிறது. இந்த நஸ்மில் கூறப்பட்டுள்ள நிலைமை மற்றும் உண்மைத்துவம் சாதாரண மனிதனிடம் இருக்கவே முடியாது. அவர்கள் கூறி வந்தார்கள்: எனது தன்மானத்தினால், இந்த நஸ்மில் கூறப்பட்டுள்ளதை வேறு எவரது நாவிலிருந்தும் என்னால் கேட்கவே முடியாது. அப்படியிருக்க இதுபோன்ற தானம் கேட்கின்ற ஒரு சாதாரண மனிதர் எப்படிப் பாடித் திரிய முடியும்! ஒரு சாதாரண மனிதர், தர்மம் கேட்பவர் இது போன்ற நஸ்ம்களைப் பாடினால் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களுக்குப் பெரும் சினம் ஏற்படும்.

எவ்வாறாயினும், கூறுகிறார்கள்: இதுவோ மக்தூமல் மில்லத் (சமுதாயத் தொண்டர்) ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீதிருந்த அந்த அன்பு மற்றும் நேசத்தின் தன்மையாகும். எவ்வாறு இருப்பினும், அந்த இரவலர் காதியானில் ஒரு சுற்று சுற்றி வந்தார். அது ஒரு ரமலான் மாதம் ஆகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்தக் காலகட்டத்தில் பலமுறை அவருக்கு நிறைய வழங்கினார்கள். ஆனால், அவர் எனது பாத்திரத்தை நிரப்பி விடுங்கள் என்று கூறுவார். ஆக, பெருநாள் அன்று அவர் மிகப் பெரும் பாத்திரத்தைக் கொண்டு வந்து, பள்ளிவாசலில் கதவுக்கு அருகே போர்வை விரித்து உட்கார்ந்து கொண்டார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வருகை தந்த போது, எனது பாத்திரத்தை நிரப்பி விடுங்கள் என்று தானம் கேட்டார். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் அதில் ஒரு ரூபாய் போட்டார்கள். அந்த ரூபாயைப் போட்டதுமே ரூபாய் மழை பொழிந்து விட்டது. பல்வேறு விதமான நாணயங்களால் அவரது பாத்திரம் நிரப்படப்பட்டது. ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் அவர் தானம் கேட்டதும் புன்சிரித்தார்கள். அந்த (ப் புன்சிரித்த) நிலையில் ரூபாயைப் போட்டார்கள். எவ்வாறாயினும், அன்னார் (அலை) கொடுத்ததனால், அன்னாரை ஏற்றுக் கொண்டிருந்தவர்களும் அவருக்கு ஓரளவு நாணயங்களால் உதவி புரிந்தார்கள். இவ்வாறு அவரது பாத்திரம் நிரம்பி விட்டது.

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: ஹுஸுர் (அலை) அவர்கள் கடைசியாக 1905 இல் தில்லிக்குச் சென்ற போது, ஒருநாள் அன்னார் தில்லியின் பெரியவர்களின் கப்ருகளுக்கெல்லாம் சென்றுவரலாம் என்று புறப்பட்டார்கள். அப்பொழுது ஒருவர், அந்தப் பக்கம், வழியில் தானம் கேட்பவர்கள் எவ்வளவு அதிகமாக இருப்பார்கள் என்றால், கடந்து செல்வது சிரமமாகி விடும் என்றார். இதைக் கேட்ட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், இன்று நாம் செல்வோம். நாம் அனைவருக்கும் கொடுப்போம். எத்தனை இரவலர்கள் இருப்பார்களோ அத்தனை பேருக்கும் கொடுப்போம் என்று கூறினார்கள். இது ஒன்றும் சாதாரண மனஉறுதியோ அல்லது சாதாரண மனத்துணிவோ கிடையாது. அன்னார் உண்மையிலேயே எவர் கேட்டாலும் அவருக்குக் கொடுப்போம் என்ற விஷயத்துக்கு ஆயத்தமாக இருந்தார்கள். எந்த அளவுக்கு மிகுதியாக இரவலர்கள் இருப்பார்கள் என்று கூறப்பட்டிருந்ததோ அவ்வளவு பேரோ கிடைக்கவில்லைதான் என்றாலும், சிலர் கிடைத்தார்கள். உதவி கேட்டவர் ஒவ்வொருவரும் தனது கேள்விக்கான விடையை செயல் ரீதியில் பெற்றார். எத்தனை பேர் கிடைத்தார்களோ அந்த அத்தனை பேருக்கும் அன்னார் உதவி புரிந்தார்கள்.

நாக்பூரைச் சேர்ந்த ஹஸ்ரத் ஹாஃபிஸ் அஹ்மதுல்லாஹ் ஸாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: ஒருநாள் ஹுஸுர் (அலை) அவர்கள் வட்ட அறையில் அமர்ந்திருந்தார்கள். அங்கு ஏறத்தாழ 20, 25 ஆட்கள் இருந்தார்கள். ஹுஸுர் (அலை) அவர்கள் ஏதோ உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஓர் இரவலர் வந்தார். உரக்க தானம் கேட்டார். அவர்கள் கூறுகிறார்கள்: எனக்கு மிகவும் வெறுப்பாக இருந்தது. ஹுஸுர் (அலை) அவர்களின் குரலில் குறுக்கீடு ஏற்பட்டது. அன்னார் உரை நிகழ்த்துகிறார்கள். இவர் மூக்கை நுழைக்கிறாரே என்று நான் கதவை அடைத்து விட்டேன். நான் எழுந்து கதவை அடைத்து விட்டேன். ஹுஸுர் (அலை) அவர்களின் பார்வை பட்டு விட்டது. அன்னார் உரையை நிறுத்தி விட்டு என்னைப் பார்த்து, எழுந்து சென்று உள்ளே கதவைத் தட்டி, இந்த இரவலருக்கு உள்ளே இருந்து ஏதாவது வாங்கிக் கொடுங்கள்! என்று கூறினார்கள்.

அதாவது, அன்னார் கூறினார்கள்: ஏன் கதவை அடைத்தீர்கள்? இப்பொழுது நீங்கள் வீட்டுக்குள் சென்று குரல் கொடுங்கள். அங்கிருந்து ஏதாவது வாங்கி வந்து இந்த இரவலருக்குக் கொடுங்கள். இவ்வாறு வீட்டிலிருந்து வரவழைத்து பிறகு, அன்னார் அவருக்கு உதவி புரிந்தார்கள். மேலும்

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

அன்னார், இரவலர் உதவி கேட்கும் போது கதவை அடைத்து விடும் இத்தகைய செயல் சரியல்ல. இரவலர் தானம் கேட்கிறார்; நீங்கள் கதவை அடைத்து விடுகிறீர்கள் என்றால், இது பெரிய தவறாகும் என்றே கூறினார்கள்.

ஹஸ்ரத் பாபூ குலாம் முஹம்மத் ஸாஹிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒரு சாரங்கி வாசிப்பவர் ஹுஸூர் (அலை) அவர்களிடம் யாசகராக வீட்டு வாசலை அடைந்தார். ஹுஸூர் (அலை) அவர்கள் அவருக்கு நாலணா வழங்கினார்கள். மேலேயிருந்து மீர் நாஸிர் நவாப் ஸாஹிப் அவர்கள் வந்து விட்டார்கள். ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் உள்ளே சென்று விட்டிருந்தார்கள். அவர் சாரங்கி வாசித்ததனால், மீர் ஸாஹிப் அவரை மிகவும் கடினமாகத் திட்டினார்கள். மேலும், இனி எப்பொழுதாவது இங்கே வந்தாய் என்றால் பார்த்துக் கொள்! என்று எச்சரித்தார்கள். அடுத்த நாள் அவர் மீண்டும் வந்து விட்டார். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் அவருக்கு வழங்குவதற்காக வெளியே வந்தபோது, முன்னால் பார்த்தார்கள், இரவலரைக் காணவில்லை. அவர் மீர் சாஹிப் அவர்களின் முகத்தை எங்கயோ பார்த்து விட்டார். நேற்றைய மீர் சாஹிப் அவர்களின் திட்டு அவருக்கு நினைவிருந்தது. அவர் அங்கிருந்து ஓடிப் போய் விட்டார். எனவே, ஹுஸூர் (அலை) அவர்கள் யாரோ ஒருவரிடம், சென்று, அந்த சாரங்கி வாசிக்கும் இரவலர் எங்கே இருக்கிறார் என்று தேடுங்கள் என்று கூறினார்கள். ஒருவர், ஹுஸூர் அவரோ ஓடிப்போய் விட்டார் என்றார். அதற்கு அன்னார், செல்லுங்கள், நீங்களும் ஓடிச் சென்று அவரை அழைத்து வாருங்கள் என்று கூறினார்கள்.

ஆக, அவர் வந்தார்; மீர் சாஹிப் அவர்களைப் பார்த்து பயந்தார். அப்பொழுது ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் மீர் சாஹிப் அவர்களைப் பார்த்து, மீர் ஸாஹிப் இந்த அப்பாவி என்ன செய்வார்! அவருக்கு வேறு எந்த சம்பாத்தியமும் தெரியாது. வேலையே தெரியாது, இவர் என்ன செய்வார்! சாரங்கி வாசிக்கிறார். அந்த இசைக் கருவியை வாசித்துக் கொண்டே இருக்கிறார். நீங்கள் அவருக்கு ஏதாவது ஒரு சம்பாத்தியத்தைக் கற்றுக் கொடுத்திடுங்கள். அவருக்கு ஏதாவது ஒரு வேலையைக் கற்றுக் கொடுத்து விடுங்கள். பிறகு அவர் இதை வாசிக்க மாட்டார். அவருக்கு ஏதாவது வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தாருங்கள் என்று கூறினார்கள். பிறகு, அந்த இசைக்கூழியிடம் தனிமையில் கூறினார்கள், அன்னார் தனியாக அழைத்துச் சென்று கூறினார்கள்: நீ இங்கு இருக்கும் நாள்கள் வரை சாரங்கி வாசிக்காதே. மீர் சாஹிப் அடிப்பார்கள். அவர்களுக்கு சினம் ஏற்படும். அவர்கள் எங்கும் உன்னை அடித்து விடப் போகிறார்கள். ஓரிரு சாட்டையடி கொடுத்து விடப்போகிறார்கள். எவ்வாறாயினும், நீ இங்கு இசைக் கருவியை வாசிக்காதே. மெல்லமாக வந்து, கதவின் தாழ்ப்பாளை, சங்கிலியை அசைத்திடு. நான் உனக்கு ஏதாவது கொடுத்து விடுவேன் என்று கூறினார்கள். இவ்வாறு அவர் காதியானில் இருந்த காலம் வரை தினமும் நாலணா வாங்கிச் செல்வார். ஹஸ்ரத் சய்யித் ஃபஸல் ஷாஹ் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: ஓர் இரவலருக்கு ஒரு பழக்கம் இருந்தது. அதாவது, அவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் வந்து, சிலநேரம் ஓரணா தாருங்கள் என்பார். சில நேரம் இரண்டணா, சில நேரம் எட்டணா என்று கேட்பார்.

ஆக, அவர் ஏதாவது ஓர் உறுதி எடுத்துக் கொண்டு கேட்டு வந்தார். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் ஏதாவது ஒரு வேலையிலோ, விஷயத்திலோ மூழ்கியிருந்தால், அவர் மீண்டும் மீண்டும் சொல்வார்; பிறகு, வாங்கிக் கொண்டுதான் செல்வார். ஒருபோதும் விட்டுச் செல்ல மாட்டார். பிறகு, ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் அவரை நன்கு அறிந்து கொண்டார்கள். அவர் வரும்போது, எவ்வளவு பைசா கேட்கிறாரோ அவ்வளவே அன்னார் வழங்கி விடுவார்கள். இவரோ இவ்வளவு வாங்காமல் நகரவே மாட்டார். இவருக்கு இவர் கேட்கும் அளவே கொடுங்கள் என்று கூறுவார்கள்.


ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: 1898 முதல் நிரந்தரமாக நான் ஹஸ்ரத் சாஹிப் அவர்களிடம் வந்து விட்டேன். 1892 முதல் காதியானுக்கு வந்து கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் பல மக்கள் யாசகம் கேட்டிருக்கிறார்கள். நான் ஹஸ்ரத் சாஹிப் அவர்களை, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அன்னார் இரவலருக்கு செம்பு நாணயத்தை, அதாவது, பைசாவை வழங்கி பார்த்ததில்லை. அன்னார் தருமம் கேட்பவர்களுக்கு எப்பொழுதும் வெள்ளி நாணயத்தைத்தான் வழங்குவார்கள். அப்போதிருந்த பண மதிப்பீட்டின் படி, செம்பு நாணயங்கள் ஒரு பைசா, இரண்டு பைசா மற்றும் அரையணா வரை இருக்கும். வெள்ளி நாணயங்கள் ஓரணா, இரண்டணா மற்றும் பெரிய தொகை நாணயங்களாக இருக்கும். நாலணா போன்றவற்றின் மதிப்புக்கு இருக்கும். ஆக, அந்தக் காலத்தில் ஒரு பைசா, இரண்டு பைசாக்கும் ஒரு விலைமதிப்பு இருக்கத்தான் செய்தது; ஆனால், ஹுஸூர் (அலை) அவர்கள் ஓரணா, இரண்டணா அல்லது அதையும் விடக் கூடுதலாக தானம் வழங்குவார்கள். அது ஒரு தகுந்த தொகையாக இருக்கும். பொதுவாக இரவலருக்கும் ஒரு ரூபாய் வழங்கி விடுவார்கள். ஓர் அஹ்மதி அல்லாத இரவலர், ஒருமுறை ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களிடம் வந்து, நான் காட்டில் ஒரு கிணறு தோண்ட நினைக்கிறேன். அங்கு அதனால் பயணிகளுக்கு நிம்மதி கிடைக்கும். அவர்கள் நீர் அருந்துவார்கள் என்று கூறி பொருளுதவி கேட்டார்.

அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள், நீ மக்களுடைய நன்மைக்காக இந்தப் பணியை செய்கிறாய். கிணறு தயார் செய், நான் உனக்குப் பணம் தருகிறேன் என்று கூறி அவருக்கு இதற்காக 200 ரூபாய் வழங்கி விட்டார்கள். அன்னார் ஜமாஅத்துக்கு கித்மத்தே கல்க் பணியைச் செய்யுமாறு வலியுறுத்தியுள்ளார்கள் எனும் போது, தாமே அதற்கான செயல் முன்மாதிரியாகவும் திகழ்ந்து காட்டியிருக்கிறார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஹஸ்ரத் அப்துஸ் ஸமீ ஸாஹிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: மியான் ஷரீஃப் அஹ்மத் சாஹிப் அவர்களின் அகீக்கா இருந்தது. விருந்தினர் இல்லத்தில் விருந்தினர்கள் அனைவரும் உணவு உண்டு கொண்டிருந்தார்கள். இவர்கள், உயிருடன் இருந்த மகன்களில் அன்னாருடைய மூன்றாவது மகன் ஆவார்கள். பிற்காலத்திலும் பிள்ளைகள் பிறந்து இறந்து விட்டார்கள். ஆனால், அது நீண்ட வாழ்நாளும் பெற்ற ஹஸ்ரத் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் அகீக்காவாகும். மக்கள் உணவு உண்டு கொண்டிருந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்களும் அதில் கலந்து கொண்டிருந்தார்கள். இரவலர் தானம் கேட்க விருந்தினர் இல்லத்துக்கு உள்ளே வரை வந்து விட்டார். மக்கள் அவரை வெளியற்றப் பார்த்தனர். ஹுஸூர் (அலை) அவர்கள் தாமே இரவலருக்கு உணவை வழங்கினார்கள். இரவலரை விரட்டுவதை விட்டும் மக்களைத் தடுத்தார்கள். உணவு உண்ண வந்தார் என்றால், அவரை விரட்டக்கூடாது என்றார்கள். தாமே தட்டில் போட்டு அவருக்கு உணவை வழங்கி விட்டார்கள்.

கபூர்தலாவைச் சேர்ந்த ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை ஒரு மவ்லவி காதியான் வந்தார். ஹுஸூர் (அலை) அவர்களிடம் விவாதம் செய்யத் துவங்கினார். பிறகு, ஹுஸூர் (அலை) அவர்கள் அவருக்கு பதில் அளிக்கத் துவங்கியதும் அவர் மௌனமாகி விட்டார். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மரணம் மற்றும் வாழ்வு எனும் தலைப்பில் உரையாடல் நடந்தது. இது தொடக்க கால நிகழ்வாகும். அன்னார் அவருக்குப் புரிய வைத்தார்கள். அவர் மௌனமானதும், அன்னார் அவரிடம், நான் வழங்கிய சான்றுகள் சரியானவை என்று நீங்கள் புரிந்து கொண்டீர்களா? என்று வினவினார்கள். அதற்கு அவர், ஆம், நான் புரிந்து கொண்டேன் என்றார். ஆனால், முற்றிலும் நாகரிகமற்ற சொற்களைப் பயன்படுத்தினார். அவர், நீங்கள் தஜ்ஜால் என்று நான் புரிந்து கொண்டேன். ஏனென்றால், தஜ்ஜாலின் பண்பில் அவன் விவாதத்தில் பிறரை வாயடைக்கச் செய்து விடுவான். அதாவது, பதிலளிக்க முடியாமல் ஆக்கி விடுவான் என்றும் வந்துள்ளது என்றார் – நவூதுபில்லாஹ்!

ஆக, பிறகு அன்னார் எதுவும்



கூறவில்லை. அவர் சென்று விட்டார். அமிர்தசரஸ் சென்று அவர் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார். அதில் இந்த நிகழ்வை எடுத்துக் கூறியுள்ளார். அதாவது, நான் இந்த சொற்களைக் கூறினேன். ஆனால், அன்னார் உள்ளே சென்றதும் நான், தேவையுடையவன் என்று ஒரு சீட்டு எழுதி அனுப்பினேன். இப்பொழுது இதைப் பாருங்கள். இவர் தனது தன்மானமின்மை பற்றி தானே இங்கு வெளிப்படுத்துகிறார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நல்ல முறையில் நடந்து கொண்டது பற்றியும் தானே வெளிப்படுத்துகிறார். அவர் கூறுகிறார்: நான் தேவையுடையவன். எனக்கு சற்று உதவி வழங்க வேண்டும் என்று நான் சீட்டு எழுதி அனுப்பினேன். நான் அன்னாரைப் பார்த்து கடுமையான சொற்களைக் கூறினேன் தான்; ஆனால், எவ்வாறாயினும், நான் தேவையுடையவன். எனக்கு உதவி வழங்கிடுங்கள் என்று கேட்டேன். அன்னார் உடனடியாக 15 ரூபாய் அனுப்பி விட்டார்கள். அன்னார் மிகவும் வள்ளல் ஆவார்கள். அவர் எழுதியுள்ளார்: அன்னார் உடனடியாக எனக்கு 15 ரூபாய் அனுப்பி விட்டார்கள். அன்னார் மிகவும் வள்ளல் ஆவார்கள். மேலும், அவர்களுடைய முகத்துக்கு எதிராகக் கடுஞ்சொற்கள் கூறப்பட்டாலும், அன்னார் கவலை கொள்வதில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த இறுதியாக நடந்த விஷயத்தைப் பற்றி, 15 ரூபாய் அனுப்பியதைப் பற்றி, யாரிடமும் சொல்லவில்லை. ஆனால், அவர் கடுமையாகப் பேசியும் அன்னார் அவருக்கு 15 ரூபாயை அனுப்பியிருக்கிறார்கள் என்பது அவருடைய இந்தப் பிரசுரத்தின் மூலமாக மக்களுக்குத் தெரிய வந்தது.

ஹஸ்ரத் காஸீ அப்துல் ஃகஃபூர் ஸாஹிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: 1906 இல் நான் என் அண்ணன் ஹாஃபிஸ் முராத் பக்ஷ் ஸாஹிப் அவர்களுடன் ராவல்பிண்டியிலிருந்து காதியானுக்குச் சென்றேன். ஹுஸூர் (அலை) அவர்கள் பள்ளிவாசலின் படிகட்டுகள் வழியாகக் கீழே இறங்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு நபர், அநேகமாக, ராவல்பிண்டியைச் சேர்ந்த ஹக்கீம் ஷாஹ் நவாஸ் ஸாஹிப் அவர்கள் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு 17 பவுண்டை ஒரு பையில் வைத்து காணிக்கையாகக் கொடுத்தார்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் அந்தப் பணப்பையை வாங்கி ஜேபில் போட்டுக் கொண்டார்கள். கீழே ஓர் இரவலர் நின்று கொண்டிருந்தார். தானம் கேட்பவர் நின்றிருந்தார். அவர் தானம் செய்யுமாறு கேட்டு விட்டார். ஹுஸூர் (அலை) அவர்கள் அந்தப் பணப்பையையே ஜேபிலிருந்து எடுத்து அவருடைய கையில் வைத்து விட்டார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு செய்வதைக் கண்டதும், மேற்கூறப்பட்ட ஹக்கீம் ஸாஹிப் அவர்கள், ஹுஸூர், அந்தப் பையில் 17 பவுண்டுகள் இருந்தன என்று பணிவுடன் கூறினார்கள். அதற்கு அன்னார், இவை அவருக்கானவையாக இருந்தன. அவரிடமே போய் சேர்ந்து விட்டன என்று கூறினார்கள். அந்த ஸஹாபி மௌனமாகி விட்டார்கள். அந்தக் காலத்திலும் ஒரு பவுண்டுக்கு மதிப்பு இருந்தது. 15 இந்திய ரூபாய்க்கு நிகரானதாக ஒரு பவுண்டு இருக்கும். அதாவது, அந்தக் காலத்திலோ இந்தத் தொகை மிகப் பெரிய தொகையாக இருந்தது. மொத்த தொகை 255 ரூபாய் ஆகிறது. ஆனால், அந்தக் காலத்திலோ இரண்டு பைசாவுக்கே ரொட்டியும் சாப்பாடும் கிடைத்து விடும்.

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: தான தர்மம் செய்வதோ அன்னாரது இயல்பில் மிகுதியாகக் காணப்பட்டதுதான். பத்தில் ஒரு பங்கை சதக்காவாக வழங்கி விடுவது அன்னாரது பொதுவான வழக்கமாக இருந்தது.

இதைப் பற்றி ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பை ஹஸ்ரத் ஸாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். அவர்கள் எழுதுகிறார்கள்:- தாயார் அவர்கள் என்னிடம், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிக அதிகமாக சதக்கா வழங்கி வந்தார்கள். மேலும், பொதுவாக எப்படி இரகசியமாக வழங்குவார்கள் என்றால், எங்களுக்கும் தெரியாமலிருக்கும் என்று கூறினார்கள்.

நான், எவ்வளவு சதக்கா வழங்கி வந்தார்கள்? என்று வினவினேன். அதற்குத் தாயார் அவர்கள், மிக அதிகமாக வழங்கி வந்தார்கள். இறுதி காலத்தில் எவ்வளவு ரூபாய் வந்ததோ அதன் பத்தில் ஒரு பங்கை சதக்காவுக்காகத் தனியாக எடுத்து வைத்து விடுவார்கள். அதிலிருந்து வழங்கிக் கொண்டே இருந்தார்கள் என்று கூறினார்கள்.

தாயார் கூறினார்கள்:- பத்தில் ஒரு பங்கை விட அதிகம் வழங்க மாட்டார்கள் என்பது இதற்குப் பொருள் கிடையாது. மாறாக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: சிலவேளை செலவுகள் அதிகமாகி விடும். இன்னும் செலவுகள் இருக்கின்றன. விருந்தினர்கள் வருகிறார்கள். லங்கர் கானாவுக்கான செலவு இருக்கிறது. இன்னும் செலவுகள் இருக்கின்றன. எனவே, மனிதனுக்கு சதக்கா வழங்குவதில் குறைபாடு ஏற்பட்டு விடுகிறது. ஆனால், ஸதக்காவுக்கான ரூபாயை முன்னரே தனியாக எடுத்து வைத்து விட்டால், பிறகு, குறைபாடு ஏற்படுவதில்லை. ஏனென்றால், அந்த ரூபாய்களை வேறு செலவில் கொண்டு வர முடியாது. தாயார் அவர்கள் கூறினார்கள்: இதனால்தான் அன்னார் முழு வருமானத்தின் பத்தில் ஒரு பங்கைத் தனியாக எடுத்து வைத்து விடுவார்கள். இல்லையென்றால், வழங்குவதற்கோ அதையும் விடக் கூடுதலாகவும் வழங்குவார்கள். வழங்குவதற்கோ அதையும் விடக் கூடுதலாகவும் வழங்குவார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: நான் தாயார் அவர்களிடம், அன்னார் சதக்கா வழங்குவதில் அஹ்மதி, அஹ்மதி அல்லாதவர் என்று வேற்றுமை காட்டுவார்களா? எனக் கேட்டேன். அதற்குத் தாயார் அவர்கள், இல்லை, யார் அஹ்மதி? யார் அஹ்மதி அல்லாதவர்? என்று ஒருபோதும் கவனத்தில் கொண்டதில்லை. தேவையுடையவர் என்றால், அவருக்கு வழங்கிடுவார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: அன்னாருக்கு இருந்த பழக்கப்படி, அன்னார் தானம் கேட்பவருக்கு ஒருபோதும் மறுத்ததில்லை. எவ்வாறு அன்னார் யாசிக்காமலும், அதாவது, தானம் கேட்காமலும் தேவையுடைவர்களுக்குப் பொருளதவி செய்வார்களோ அவ்வாறே அன்னார் தானம் கேட்பதன் நுணுக்கத்திலும் நுணுக்கமான நிலையையும் நன்றாகப் புரிந்திருந்தார்கள் என்பதும் அன்னாருடைய மேலான பழக்கத்தில் ஒன்றாக இருந்தது. இத்தகைய தருணங்களிலும் அன்னார் கொடையளித்து வந்தார்கள்.

ஸாஹிப்ஸாதா ஸியாதஹ் சிராஜுல் ஹக் ஸாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை ஒருவர் அன்னாரிடம் அழகான தொப்பியை அனுப்பினார். இந்த பார்சல் ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களிடம் வந்த சேர்ந்த போது, தற்செயலாக ஒரு ஹிந்துவும் உடன் இருந்தார். அன்னார் பார்சலைத் திறந்ததும் அதில் தொப்பி இருந்தது. அந்த ஹிந்து அந்தத் தொப்பியின் அழகை மிகவும் புகழ்ந்தார். அன்னார் அவரது நாவிலிருந்து தொப்பியின் புகழைக் கேட்டதும், உடனடியாக அந்தத் தொப்பியை அவருக்கு வழங்கி விட்டார்கள்.

கபூர்தலாவைச் சேர்ந்த ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் அஹ்மத் ஸாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்:

ஹாஜி ஹுனைன் எனும் ஓர் அஹ்மதி இருந்தார். அவர் ஹஜ் செய்து வந்திருந்தார். கொற்கை முத்துக்களைக் கொண்ட, அதாவது, விலையுயர்ந்த முத்துக்களைக் கொண்ட ஒரு தஸ்பீஹ் மாலையைக் கொண்டு வந்திருந்தார். அதைக் கொண்டு வந்து அன்பளிப்பாக ஹுஸூர் அவர்களுக்கு முன்னால் சமர்ப்பித்து விட்டார். கொற்கை முத்துக்களைக் கொண்ட தஸ்பீஹ் மாலையாகும். அவர்கள் கூறுகிறார்கள்: அப்பொழுது நானும் சியால்கோட்டின் ஒரு தோழரும் ஹுஸூர் (அலை) அவர்களின் அவையில் இருந்தோம். எங்களுக்கு முன்னால் ஹாஜி ஹுஸைன் ஸாஹிப் அவர்கள் தஸ்பீஹ் மாலையை ஹுஸூர் (அலை) அவர்களுக்கு முன் சமர்ப்பித்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள், ஜஸாக்கல்லாஹ் என்று கூறினார்கள். அந்த தஸ்பீஹ் மாலை மிகவும் அழகானதாக இருந்தது. அவர்கள் கூறுகிறார்கள்: அவர் சென்ற பிறகு, நான் இந்த தஸ்பீஹ் மாலையை வாங்கிக் கொள்ளலாம் என்று எண்ணியிருந்தேன். சியால்கோட்டின் தோழரும் இதையே நினைத்திருந்தார். ஹாஜீ ஹுஸைன் ஸாஹிப் அவர்கள் சென்றதும், சியால்கோட் நண்பர், ஹுஸூர், இந்த தஸ்பீஹ் மாலை மிகவும் அழகாகத் தெரிகிறது என்று பணிவுடன் கூறினார். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், உங்களுக்குப் பிடித்திருக்கிறது என்றால், நீங்கள் எடுத்துக் கொள்ளுங்களேன் என்று கூறி தஸ்பீஹ் மாலையை அவருக்கு வழங்கி

விட்டார்கள். ஹுஸூர்! நானும் அதைப் பெற நினைத்திருந்தேன் என்று நான் பணிவுடன் கூறினேன். அப்போது, ஆகட்டும்! நீங்கள் இருவரும் பாதி பாதி ஆக்கிக் கொள்ளுங்கள் என்று அன்னார் (அலை) கூறினார்கள். பின்னர் இந்த சியால்கோட் நபர் என்னிடம், தஸ்பீஹ் மாலை நூறு மணிகளைக் கொண்டிருக்கும். என்னிடமே இருக்கட்டுமே! என்றார். நான், சரி, நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்றேன். பிறகு, அவர்கள் அவருக்கு வழங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் ஹகீம் அல்லாஹ் தத்தா சாஹிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்:- சர்ஃபராஸ் கான் இவ்வாறு எடுத்துக் கூறினார்: நாங்கள் ஜல்ஸாவுக்கு வந்தோம். ஹுஸூர் (அலை) அவர்களுக்கு ஒருவர் குதிரையை (அன்பளிப்பாக) வழங்கினார். சர்ஃபராஸ் கூறினார்: இந்த குதிரை எனக்குக் கிடைத்து விட வேண்டும். நான் அதை எடுத்துச் செல்ல வேண்டும். இதோ, மஸீஹ் (அலை) அவர்களின் குதிரையைக் கொண்டு வந்துள்ளேன் என்று சொல்ல வேண்டும் என என் உள்ளத்தில் தோன்றியது. அது பயணிப்பதற்கு ஒரு நல்ல உயர்தரக் குதிரையாக இருந்தது. ஜல்ஸா முடிந்ததும் நான், ஹுஸூர், நான் திரும்பிச் செல்ல விழைகிறேன் என்று பணிவுடன் கூறினேன். ஹுஸூர் (அலை) அவர்கள், நில்லுங்கள் என்றார்கள். மூன்றாவது நாள் நான் மீண்டும் அவ்வாறே சொன்னதும், ஹுஸூர் (அலை) அவர்கள், சௌத்ரீ சாஹிப், இந்தக் குதிரையைக் கொண்டு செல்லுங்கள் என்று கூறினார்கள். நான், ஹுஸூர், இந்தக் குதிரையின் விலை என்ன? என்று கேட்டேன். அதற்கு அன்னார், இதற்குப் புல்லும், தானியமும் போடுங்கள். இதன் மீது ஏறி பயணித்திடுங்கள். இதுவே இதற்கான விலையாகும் என்று கூறினார்கள். அதாவது, எந்த விலையும் கிடையாது; எடுத்துச் சென்று, பயணம் செய்யுங்கள் என்றார்கள். ஹஸ்ரத் மலிக் குலாம் ஹுஸைன் ஸாஹிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: மவ்லவி அப்துர் ரஹ்மான் சாஹிப் ஷஹீத் அவர்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து வந்திருந்தார்கள். அவர்கள் ஹுஸூர் (அலை) அவர்களைச் சந்திக்க விரும்பினார்கள். அப்பொழுதும் பல பொருட்களைக் கொண்டு வந்தார்கள். தோலாலான ஒரு மேலங்கியையும் கொண்டு வந்திருந்தார்கள். நான் தகவல் கொடுத்தேன். ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் உள்ளேயே அழைத்துக் கொண்டார்கள். அவர்கள் அந்தப் பொருட்களையும் அந்த மேலங்கியையும் ஹுஸூர் (அலை) அவர்கள் முன் சமர்ப்பித்தார்கள். ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் பெரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். மவ்லவி ஸாஹிப், தாங்கள் மிகவும் சிரமம் மேற்கொண்டள்ளீர்கள் என்று கூறினார்கள். அதற்கு அவர்கள், ஹுஸூர்! இந்த மேலங்கியை நான் ஹுஸூர் அவர்களுக்காகக் கொண்டு வந்திருக்கிறேன். ஹுஸூர் அவர்கள் எனக்கு முன்னால் இதை அணிந்து கொள்ள வேண்டுமென மனம்விரும்புகிறது என்று பணிவுடன் கூறினார்கள். ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் எழுந்து நின்று விட்டார்கள். அதை அணிந்து கொண்டார்கள். அது ஒரு நீளமான கோட்டாக இருந்தது. அல்லது மேலங்கியாக இருந்தது. அது கால் முட்டி வரை வந்தது. நீளமான மேலங்கியாகத்தான் இருக்கும். மாலை வேளையில் உணவின் போது, காஜா கமாலுத்தின் ஸாஹிப் அவர்கள், ஹுஸூர், மவ்லவி அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் ஒரு மேலங்கியைக் கொண்டு வந்துள்ளார்கள். அது மிகவும் விலையுயர்ந்ததும், வெப்பமானதும் ஆகும். மிகவும் உயர்தரமாக செய்யப்பட்டுள்ளது என்று பணிவுடன் கூறினார்கள். காஜா சாஹிப் அவர்கள் இந்த மேலங்கியை முதலில் பார்த்திருக்கிறார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள், காஜா சாஹிப், உங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அவர்கள், ஹுஸூர், பெரும் கருணை புரிந்துள்ளீர்கள் என்று பணிவுடன் கூறினார்கள்.

இவ்வாறு ஹுஸூர் (அலை) அவர்கள் அந்த மேலங்கியை காஜா சாஹிப் அவர்களுக்கு வழங்கி விட்டார்கள். ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: லூதியானாவைச் சேர்ந்த ஹாஃபிஸ் நூர் அஹ்மத் சாஹிப் அவர்கள் பஷ்மினா எனும் ஆட்டுரோமத் துணி வணிகர் ஆவார்கள். இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பழைய மற்றும் கலப்பற்ற தொண்டர்களில் ஒருவர் ஆவார்கள். இந்த வணிகர் உரோமத் துணி வாணிபம் செய்து வந்தார்கள். அன்னாருடைய கலப்பற்ற தொண்டர்களில் ஒருவர் ஆவார்கள். இவர்களது வணிகத் தொழிலில் இவர்களுக்குக் கடும் இழப்பு ஏற்பட்டு விட்டது. தொழில் கிட்டத்தட்ட முடங்கி விட்டது. எனவே, அவர்கள் தமது பொருளாதார நிலையை சரி செய்யத் தகுதி பெற, வேறு எங்காவது செல்லலாம்; வேறு ஏதாவது வியாபாரம் செய்யலாம் என்று நினைத்தார்கள்.

இவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்நாளில் தொடர்ந்து கடிதங்கள் எழுதி வந்தார்கள். தமது ஆற்றலுக்கும், வசதிக்கும் அதிகமாக, இயக்கத்துக்கான பொருள் தியாகம் செய்து வந்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வள்ளண்மை, அதாவது, ஈகை, கொடை, பரிசில் மற்றும் வாரி வழங்குதல் தொடர்பாக நானோ ஒரே ஒரு விஷயத்தைத்தான் கூறுகிறேன். அன்னாருக்குக் கொஞ்சமாக வழங்கத் தெரியவே தெரியாது.

தமது சொந்த நிகழ்வை எடுத்துரைக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: எனது வணிகம் பாழான போது, வேறு ஏதாவது இடத்திற்குச் சென்று வணிகம் செய்யலாம் என்று எண்ணி அதற்கான பயணம் மேற்கொள்ள முடிவெடுத்தபோது, நான் வணிகம் தொடங்க எனக்குச் சிறிது கடன் நல்கிடுங்கள் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் சிறிது பணம் கேட்டேன். ஹுஸூர் (அலை) அவர்கள், அன்னார் பணம் வைத்து வந்த ஒரு பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள். எவ்வளவு வேண்டுமோ எடுத்துக் கொள்ளுங்கள் என்று எனக்கு முன்னால் பெட்டியை வைத்து விட்டார்கள். ஹுஸூர் அவர்கள் இதனால் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். நான் எனது தேவைக்கேற்ப எடுத்துக் கொண்டேன். ஹுஸூர் (அலை) அவர்கள், முழுவதையுமே எடுத்துக் கொள்ளுங்கள் என்றே கூறிக் கொண்டிருந்தார்கள். உண்மையான விஷயம் என்னவென்றால், நண்பர்களுடனான அன்னாரது அணுகுமுறை தனித்துவம் வாய்ந்ததாக இருந்தது. அன்னார் தமது செல்வத்தை செயல் ரீதியில் நண்பர்களின் செல்வமாகவே கருதி வந்தார்கள். இந்த விஷயத்தில் தொண்டர் யாராவது அந்நியத்தன்மையை வெளிப்படுத்தினால் அன்னாருக்கு வேதனை ஏற்படும். தன்மானத்தைக் காட்டினால், அல்லது வெட்கத்தை வெளிப்படுத்தினால், அல்லது அந்நியத்தன்மையை வெளிப்படுத்தினால். தன்மானம் இல்லை, அந்நியத்தன்மையை வெளிப்படுத்தினால்.

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஷேக் முஹம்மத் இஸ்மாயீல் ஸாஹிப் சர்ஸாவீ அவர்கள் எனது 32 ஆண்டு கால கலப்பற்ற தோழரும், சகோதரரும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பழைய தொண்டரும் ஆவார்கள். துவக்கத்திலிருந்தே அவர்களது இயல்பு சூஃபி தன்மையுடையதான அமைந்திருந்தது. மேலும், நல்லடியார்கள் மீது பற்றுதல் நீடித்திருந்தது. தஃலீமுல் இஸ்லாம் மத்ரஸாவில், தொடக்கத்திலிருந்து இன்று வரை ஆசிரியராக இருக்கிறார்கள். துவக்கத்தில் அவர்கள்தான் விருந்தினர்களுக்கு உணவெல்லாம் கொண்டு வந்து கொடுப்பார்கள். ஒருவகையில், அவர்களை நாஸிர் ஸியாஃபத் என்று சொல்ல வேண்டும். அவர்கள் இங்கு வந்ததிலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அவர்கள் மீது குறிப்பாக, அக்கறை காட்டுவார்கள். அவர்களது தேவைகளுக்குத் தாமே பொறுப்பேற்றுக் கொள்வார்கள். அதாவது, முழு பொறுப்பையும் அன்னார் ஏற்றுக் கொள்வார்கள். அன்னார் அவர்களுடைய உடைமைகளுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டவராக இருந்தார்கள். தேவைகளை நிறைவேற்றுவார்கள். ஒருமுறை ஹஸ்ரத் பாட்டனார் மர்ஹூம் அவர்கள், அதாவது, ஹஸ்ரத் மீர் நாஸிர் நவாப் ஸாஹிப் அவர்கள் ஷேக் ஸாஹிப் அவர்களிடம் கோபித்துக் கொண்டார்கள். மிகவும் அதிகமாக கோபித்துக் கொண்டார்கள். இவர்கள் (ஷேக் ஸாஹிப்) அவர்களுடைய கடன்கள் போன்றவற்றின் பட்டியலை ஆயத்தம் செய்தார்கள். அதில் இனிப்புக்


Proprietor off : 044- 2260 1886

**RAZIK XEROX & TELECOM**

AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX



- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

கடைக்காரர்களின் கடனும் இருந்தது. ஆனால், அது செலுத்தப்பட்டு விட்டது என்பது இவர்களுக்குத் தெரியாமல் இருந்தது. அவர்கள் லங்கர் கானாவை இயக்குவதற்காக இனிப்புக் கடைக்காரரிடம் இவ்வளவு கடன் வாங்கி வைத்துள்ளார்கள் என்று இந்த விவகாரம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வரை வந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதைக் கேட்டு சிரித்தவாறு, எனக்கு இது தெரியும். அந்தக் கடன் செலுத்தவும் பட்டு விட்டது. மீர் சாஹிப், நீங்கள் கவலைப்படாதீர்கள் என்று கூறினார்கள். இன்னும் சொல்வதாயின், என்ன கடன் இருந்தாலும் ஒவ்வொரு வாரமும் அவர் அதைப் பற்றி கவலையற்றவராக ஆகி விடுகிறார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஷேக் ஸாஹிப் அவர்களுக்கு வார வாரம் அல்லது அவர் விரும்பும்போது, செலவுகளை செலுத்தி வந்தார்கள். ஷேக் சாஹிப் அவர்கள் முற்றிலும் தயக்கமின்றி, ஒரு மகன் தந்தையிடம் சென்று சொல்வது போன்று, இன்னும் சொல்வதாயின், அதையும் விட அதிகமாகத் தயக்கமே இன்றி இவ்வளவு செலவாகி விட்டது என்று பணிவுடன் கூறுவார்கள். ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் உடனடியாக செலுத்தி விடுவார்கள். இது போன்ற பேரரசர்க்குரிய, கற்பிப்பவருக்குரிய கொடையளிக்கும் பண்பு அன்னாரிடம் இருந்தன. இதில் சொந்த செலவுகளும் ஆகினதான். நிச்சயமாக லங்கருக்கும் செலவுகள் ஆகியிருக்கும்.

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் சய்யித் ஃபஸ்ல் ஷாஹ் ஸாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மிகவும் கலப்பற்ற தொண்டர்களில் ஒருவர் ஆவார்கள். மதிப்பிற்குரிய ஷாஹ் சாஹிப் அவர்கள் சய்யித் நாஸிர் ஷாஹ் சாஹிப் அவர்களின் கண்ணியத்திற்குரிய சகோதரர் ஆவார்கள். இவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீது நேசம் இருந்தது. கடைசியில் இவர்கள் ஹிஜ்ரத் செய்து காதியானுக்கு வந்து விட்டார்கள். தாருஸ் ஸுஅஃபாவில் தங்கியிருந்தார்கள்.

1900 இல் நடந்த நிகழ்வு, இவர்கள் காதியானுக்கு வந்திருந்தார்கள். இவர்கள் 6 ஜூலை 1900 இல் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செல்வதற்கு அனுமதி கோரினார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் சில அறிவுரை சொற்களை எழுதி அளிக்க வேண்டும் என்றும் விரும்பினார்கள். ஏதோ ஒரு மருந்தையும், ஒரு மேலாடையையும் கூட வேண்டினார்கள். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுக்குக் கடுமையான தலை வேதனை இருந்தது. அன்னாரால் தொழுகைக்குக் கூட வருகை தர முடியவில்லை. ஆனால், அன்னார் தலையில் கடுமையான வலி இருந்தும், ஷாஹ் சாஹிப் அவர்களின் அந்தக் கடிதத்துக்கு பதில் அளிக்கும் விதமாக ஓர் அறிவுரைப் படிவத்தை எழுதினார்கள். மருந்து மற்றும் மேலாடையும் கூட வழங்கினார்கள். அன்னார் தமது நோயின் மிகக் கடுமையான நிலைமைகளிலும், தம் தொண்டர்களின் ஆகுமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாக இருந்து வந்தார்கள் என்பதற்கு இந்த நிகழ்வு சான்றளிக்கிறது. பொது மக்களின் பலன் மற்றும் நன்மைக்காகத் துன்பத்தையும் அன்னார் பொருட்படுத்த மாட்டார்கள். ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: அன்னாரது செயல் முறையில் இந்த ஒன்றும் காணப்படுகிறது. அதாவது, தாராள குணத்தை வெளிப்படுத்தி சிலவேளை அன்னார் தோழர்களின் மகிழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்வார்கள். இந்த வழிமுறை அன்னாரது அன்பை வெளிப்படுத்துதல் மற்றும் வள்ளல் தன்மையின் மேன்மையைக் கொண்டிருந்தது. இதன்படி, ஹஸ்ரத் முன்ஷீ அப்துல்லாஹ் சாஹிப் சனோரீ (ரலி) அவர்களுக்கு அன்னார் அவ்வப்போது எழுதிய கடிதங்களைப் படிப்பதன் மூலமாகவும், சுயமே மதிப்பிற்குரிய முன்ஷீ ஸாஹிப் அவர்களின் எடுத்துரைப்பின் மூலமாகவும் இதுவே நிரூபணமாகிறது. அதாவது, ஹுஸூர் (அலை) அவர்கள் ஒருமுறை மதிப்பிற்குரிய முன்ஷீ சாஹிப் அவர்களின் வலீமா விருந்திலும், மற்றொருமுறை மகனுக்கான அகீக்காவிலும் தம் சார்பாக ஒரு தொகையை செலவு செய்து விட்டார்கள். அந்த செலவு செய்ததில் அன்னாருக்கு இன்பமும், அகமகிழ்வும் இருந்தது. சிலவேளை மக்கள் இது போன்ற தமது நன் நிகழ்ச்சிகளில் ஹஸ்ரத் சாஹிப் அவர்களுக்கு சிறிது பணம் அனுப்பி வைத்து விடுவார்கள். மேலும், இப்பொழுது அங்கே தாங்களே விருந்து ஏற்பாடு செய்து விடுங்கள் என்று எழுதி விடுவார்கள். ஆனால், அவர்கள் கடிதம் எழுதும்போது, காதியானில் கொடுக்கும் விருந்து ஒரு சில நபர்களுக்கான விருந்தாக இருக்க முடியாது என்பதை அறியாமையில் மறந்து விடுவார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைச் சுற்றியோ பல மக்கள் இருப்பார்கள். அவர்கள் அனுப்பும் பணமோ மிகக் குறைவாக இருக்கும். அல்லது அதற்குப் போதுமானதாக இருக்காது. ஆனால், ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் அவர்களுக்கு இதைப் பற்றி மீண்டும் எந்தக் கடிதமும் எழுத மாட்டார்கள். மாறாக, தம் சார்பாக, தம் தரப்பிலிருந்து ஒரு தொகையைப் போட்டு அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றி விடுவார்கள். இது போன்ற சந்தர்ப்பங்கள் அன்னாருக்குப் பல முறை வந்திருக்கின்றன. ஆனால், ஒருபோதும் அதைப் பற்றி குறிப்பிடவோ, சுட்டிக்காட்டவோ மாட்டார்கள். மாறாக, இது போன்ற தருணங்களில் எப்பொழுதும் இன்ன தோழர் சார்பாக விருந்து என்றே கூறுவார்கள்.

சிலவேளை வெளிப்பட்டும் விடும். நெருங்கிய நண்பர்களாக இருந்தவர்களிடம் அன்னார், நீங்கள் அனுப்பிய தொகை குறைவாக இருந்தது; எனவே, நான் செலவை முழுமைப்படுத்தி விடுகிறேன் என்று அவர்களுக்குக் கூறியும் விடுவார்கள். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் முன்ஷீ அப்துல்லாஹ் சாஹிப் சனோரீ (ரலி) அவர்களுக்கு அவர்களுடைய திருமணத்தின் போது எழுதிய தமது கடிதத்திலோ இவ்வாறு எழுதியுள்ளார்கள்: உங்களுக்குத் திருமண வாழ்த்துகள். நீங்கள் எழுதியிருந்ததற்கேற்ப ஜுமுஆ அன்று, உங்கள் சார்பாக விருந்தினர்களுக்கு வலீமா உணவு பரிமாரப்பட்டது. விருந்தினர்கள் அதிகமாக இருந்தார்கள். சேட் சாஹிப் அவர்கள், அதாவது, அப்துர் ரஹ்மான் ஸாஹிப் மதராஸீ, ரஹ்மத்துல்லாஹ் ஸாஹிப் மற்றும் இன்னும் பல கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் இருந்தார்கள். ஏறத்தாழ 80 க்கும் மேற்பட்ட மக்கள் இருந்திருப்பார்கள். எனவே, நீங்களோ 10 ரூபாய் அனுப்பியிருந்தீர்கள். அது போதுமானதாக இருக்கவில்லை. எனவே, இந்த மகிழ்ச்சியில் நான் என் சார்பாகவும் 10 ரூபாய் போட்டு 20 ரூபாய்க்கு விருந்து ஏற்பாடு செய்து விட்டேன். புலாவ், ஸர்தா போன்ற நல்ல உணவுகளை சமைக்க வைத்தேன். குருமா மற்றும் நாண் போன்றவையும் இருந்தன. எவ்வாறாயினும், அன்னார் அடுத்து எழுதுகிறார்கள்: விருந்தினர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். உணவு உண்டு விட்டு உங்களுக்கு நல்வாழ்த்துகளைக் கூறினார்கள்; (உங்களுக்காக துஆ செய்தார்கள்). விருந்தினர்களுக்கு இது அவர்கள் சார்பாக விருந்து என்றே கூறினார்கள். நானும் இதில் பணம் சேர்த்துள்ளேன் என்று தம்மைப் பற்றி கூறவில்லை.

ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் முன்ஷீ அப்துல்லாஹ் சாஹிப் சனோரீ (ரலி) அவர்களுக்கு அவர்களுடைய மகனின் அகீக்காவின் தருணத்தில் எழுதிய தமது ஒரு கடிதத்தில் இவ்வாறு கூறினார்கள்: இரண்டு செம்மறியாடுகள் அறுக்கப்பட்டன. அவற்றின் இறைச்சி மிகவும் நன்றாக இருந்தது. கறி புலாவின் ஒரு தேக்சாவும், ஸர்தாவின் ஒரு தேக்சாவும், அதாவது, குங்குமப்பூ போன்றவை கலந்து சமைக்கப்பட்ட இனிப்புச் சோறின் ஒரு தேக்சாவும் இருந்தது. ரொட்டி மற்றும் இறைச்சியும் சமைக்கப்பட்டது. ஏறத்தாழ 70 விருந்தினர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு விருந்தோம்பல் செய்யப்பட்டது. உங்களுடைய நல்லெண்ணத்தின் காரணமாக புலாவ், ஸர்தா போன்றவை என இரண்டுமே மிகவும் நன்றாக சமைக்கப்பட்டிருந்தன. அன்னார், இந்த வேலை 24 ரூபாயில் முழுமை பெற்றது. ஆனால், உங்களால் இவ்வளவு கொடுக்க முடியாது என்று எனக்குத் தெரியும். எனவே, அதன் பாதியான 12 ரூபாயை நீங்கள் எப்பொழுதாவது அனுப்ப விரும்பினால் அனுப்பிடுங்கள் என்று எழுதியிருந்தார்கள். அந்த விருந்து (ஏற்பாட்டு)க்காக அன்னார் பெரும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். அவர்களுக்கு வாழ்த்தும் தெரிவித்தார்கள். காபூலைச் சேர்ந்த ஹஸ்ரத் அஹ்மத் நூர் ஸாஹிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: 1902 இல் நான் மக்ரிப் தொழுகை நேரத்தில் காதியானுக்கு வந்த போது, அக்கணமே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

அவர்கள் என்னிடம் பைஅத் வாங்கினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தாமாகவே எனக்கு வீட்டுக்காக நிலத்தை வழங்கினார்கள். நான் கேட்காமலேயே எனக்குத் திருமணமும் செய்து வைத்து விட்டார்கள். எனக்குத் தெரியாமலேயே (ஏற்பாடு செய்து) என்னைத் திருமண வழியனுப்புதலில் சில தோழர்களுடன் அனுப்பி வைத்து விட்டார்கள்.

அன்னார் தமது லங்கர் கானாவிலிருந்து( அதாவது விருந்தினர் இல்லத்திலிருந்து) எனக்காக ஒரு மாவு மூட்டை நிர்ணயித்து விட்டார்கள். மேலும், அஹ்மது நூர் உயிருடன் இருக்கும் வரை எனது கணக்கில் இருந்து இந்த மாவை அவருக்கு அளித்து வாருங்கள் என்று கூறினார்கள். அன்னார் இந்தக் கட்டளையை மவ்லவி முஹம்மத் அலீ சாஹிப் அவர்களுக்கு வழங்கினார்கள். அன்னார் கூறினார்கள்: அஹ்மத் நூருடைய மாவுக்கான செலவை நான் கொடுத்து வருவேன். மியான் அப்துர் ரஹீம் அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை நான் கடுமையான நோயுற்றேன். நான் தப்பிப்பதற்கான நம்பிக்கை இருக்கவில்லை. மயங்கி கிடந்தேன். அப்பொழுது என் பெரியப்பா மர்ஹூம் மீரான் பக்ஷ் சாஹிப் அவர்கள் ஹுஸூர் (அலை) அவர்கள் புட்டர் எனும் இடத்தில் நடைப்பயிற்சி மேற்கொண்டு விட்டு திரும்பி வந்து கொண்டிருக்கும் போது, மோரி வாயில் சதுக்கத்தில், ஹுஸூர், அப்துர் ரஹீமைப் பார்த்து விட்டுச் செல்லுங்கள். கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கிறார் என்று கூறினார்கள். ஹுஸூர் (அலை) அவர்களுடன் இன்னும் பல தோழர்களுடன் சேர்ந்து ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்களும் இருந்தார்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் பரிவுகூர்ந்து ஏழையின் இல்லத்துக்கு வருகை தந்தார்கள். நான் கட்டிலில் கிடப்பதைப் பார்த்து, தமது வலக்கையால் எனது தோளை அசைத்து, ஏன் பதற்றம் அடைகிறாய். நீ இறக்கப் போவதில்லை என்று கூறினார்கள். இதனால் என் கண்கள் திறந்து விட்டன. அத்துடன் ஹுஸூர் (அலை) அவர்கள் வீட்டின் கூரையின் பக்கமும் பார்த்தார்கள். அப்துர் ரஹீம், நீ இந்த நோயினால் இறக்கும் நிலையில் இல்லை. ஆனால், சிதிலமடைந்த, மோசமான நிலையில் இருக்கின்ற இந்த வீடு உனது இறக்கும் நிலைக்குக் காரணமாக இருக்கிறது. அதன் கூரை மிகவும் மோசமாக உள்ளது. நீ நலமானதும் அதன் கூரையை சரி செய்து விடு என்றார்கள். என் தாயாரிடம், என்னுடன் வந்து மருந்து வாங்கிச் செல்லுங்கள். மருந்து கொடுங்கள். நாம் துஆவும் செய்வோம். நலமாகி விடுவார். இன் ஷா அல்லாஹ் என்று கூறினார்கள். இதனால் என் தாயார் ஹுஸூர் (அலை) அவர்களுடன் அன்னாரது இல்லத்திற்குச் சென்றார். ஹுஸூர் (அலை) அவர்கள் மூன்று பொட்டலங்கள் மருந்து வழங்கினார்கள். ஒரு பொட்டலத்தை நான் அப்பொழுதே, அதாவது, காலை வேளையில், 9 10 மணிக்கு உண்டேன். இரண்டாவதை மாலையில் உண்டேன். அந்த இரண்டு பொட்டலங்களை உண்ட பிறகு, எழுந்து கட்டிலில் அமர்ந்து கொண்டேன். மூன்றாவது பொட்டலத்தை அடுத்த நாள் காலையில் உண்டேன். அந்த மூன்று பொட்டலங்களை சாப்பிட்டே எனது நோய் முற்றிலுமாக விலகிக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், அவர்கள் கூறுகிறார்கள்: 5 6 நாள்களுக்குப் பிறகு, நான் முற்றிலும் நலமடைந்து விட்டேன். அல்லது சாதாரண பலவீனம் இருந்தது. அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு வாரத்திற்குப் பிறகு, ஹுஸூர் (அலை) அவர்கள் முன் ஆஜரானேன். ஆக, பலவீனம் இருந்ததுதான்; எவ்வாறாயினும், என்னைக் கைத்தாங்கலாக மேலே அழைத்துச் சென்றார்கள். ஹுஸூர் (அலை) அவர்களுக்கு முன்னால் சென்ற போது, ஹுஸூர் (அலை) அவர்கள், நீ திருப்தியடைந்து விட்டாயா? என்று கேட்டார்கள். அதற்கு நான், ஹுஸூர் அவர்களின் துஆ மற்றும் மருந்தினால் அந்த நாளிலிருந்து காய்ச்சல் போன்றவை முற்றிலும் இல்லை என்று பணிவுடன் கூறினேன். அதற்குப் பிறகு, ஹுஸூர் (அலை) அவர்கள், வீட்டின் நிலை என்ன ஆனது? என்று கேட்டார்கள். அதற்கு நான், ஒன்று ஒன்றரை மாதம் நோயுற்றிருந்திருக்கிறேன். ஒரு பைசா கூட என்னிடம் இல்லை. எப்படி வீட்டை சரி செய்வேன்! எப்படி கூரை மாற்றுவேன்! என்று பணிவுடன் கூறினேன். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள், நாம் அமைத்துக் கொடுப்போம் என்றார்கள். அக்கணமே மவ்லவி முஹம்மத் அலீ சாஹிப் அவர்களை அழைத்து, நீங்கள் மத்ரஸாவின் அறைகளுக்காகக் கட்டைகளை வரவழைக்கும்போது, அப்துர் ரஹீமின் வீட்டின் கூரைக்காகவும் கட்டளைகளை வரவழைத்து அதை அமைக்கச் செய்யுங்கள். எவ்வளவு செலவாகுமோ அதை நாம் கொடுத்து விடுவோம் என்று கூறினார்கள். இதன்படி, மவ்லவி முஹம்மத் அலீ சாஹிப் அவர்கள் ருகாராம் எனும் மேஸ்திரியை என் விட்டைப் பார்ப்பதற்கும் கட்டகளுக்கான செலவைக் கணித்திடுவதற்காகவும் அனுப்பினார்கள். அவர் வந்து மவ்லவி சாஹிப் அவர்களிடம், வீட்டுக்கு 10 உத்திரங்கள் எடுக்கும் என்று கூறினார். மவ்லவி முஹம்மத் அலீ சாஹிப் அவர்கள் ஹுஸூர் (அலை) அவர்களிடம், 30 ரூபாய் கட்டைகளுக்கு ஆகும் என்று கூறினார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் மவ்லவி சாஹிப் அவர்களுக்கு 30 ரூபாய் வழங்கி விட்டார்கள். இவ்வாறு எனது வீடு உருவாகி விட்டது. அவர்கள் கூறுகிறார்கள்: இதுபோக, கூலி ஆட்களுக்காக ஆன செலவு எவ்வளவு என்று? எனக்குத் தெரியாது அதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழங்கினார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள். தூய வாழ்க்கை வரலாற்றின் பொதுவான சுருக்கத்தை எடுத்துரைத்தவாறு விவரிக்கிறார்கள்: எங்களுடைய பெரிய மாமா மர்ஹூம் ஹஸ்ரத் டாக்டர் மீர் முஹம்மத் இஸ்மாயீல் ஸாஹிப் அவர்கள் நான் சொல்லியதானல், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நல்லொழுக்கங்கள் மற்றும் நற்பண்புகள் தொடர்பாக ஒரு கட்டுரை எழுதினார்கள். அந்தக் கட்டுரையில் அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் பரிவுள்ளவராகவும், கருணையாளராகவும் இருந்தார்கள். வள்ளலாக இருந்தார்கள். விருந்தோம்பல் செய்பவராக இருந்தார்கள். மக்களில் எல்லாரையும் விடப் அதிகம் வீரம் மிக்கவராக இருந்தார்கள். அதாவது, மக்களில் எல்லாரையும் விடப் பெரிய வீரராக இருந்தார்கள்.

சோதனைகளின் வேளையில் மக்களின் உள்ளங்கள் சேர்ந்து விடும்போது, அன்னார் ஆண் சிங்கத்தைப் போன்று முன்னால் செல்வார்கள். மன்னித்தல், கண்டும் காணாமலிருத்தல், தாராள மனப்பாண்மை, தன்னடக்கம், நன்றியுணர்வு, எளிமை, இறைநேசம், இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீதான பேரன்பு, மார்க்கப் பெரியோர்களுக்கு மதிப்பளித்தல், வாக்குறுதியை நிறைவேற்றுதல், நற்பண்பார்ந்த சமூக உறவு, கண்ணியம், தன்மானம், துணிவு, உறுதியான உள்ளம், இனிய புன்னகை மற்றும் மகிழ்ந்த முகம் ஆகியவை அன்னாரது தனிச்சிறப்பு வாய்ந்த நல்லொழுக்கங்களாக இருந்தன. அவர்கள் எழுதுகிறார்கள்: நான் இரண்டு வயது குழந்தையாக இருக்கும்போது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பார்த்தேன். பிறகு, நான் 27 வயது இளைஞனாக இருந்த போது, அன்னார் என்னுடைய இந்தக் கண்களிலிருந்த மறைந்து போனார்கள். அதாவது, அன்னார் வஃபாத் ஆகி விட்டார்கள். ஆனால், நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன், நான் அன்னாரை விடச் சிறந்த, அன்னாரை விட அதிகம் நல்லொழுக்க மிக்க, அன்னாரை விட அதிகம் நற்பண்புள்ள, அன்னாரை விட அதிகம் சான்றாண்மை கொண்ட பரிவு காட்டக்கூடியவர், அன்னாரை விட அதிகம் அல்லாஹ் மற்றும் ரஸூல் (ஸல்) அவர்கள் மீதான பேரன்பில் மூழ்கியிருக்கக் கூடிய எவரையும் கண்டதில்லை. அன்னார் ஓர் ஒளியாவார்கள். அந்த ஒளி மனிதர்களுக்காக உலகில் தோன்றியது. அன்னார் ஒரு கருணை மழையாவார்கள். அது ஈமானின் நீண்ட வறட்சிக்குப் பிறகு, இந்த மண்ணில் பொழிந்தது; இதை பசுமையாக்கி விட்டது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் சுயமே தமது கருத்தையும் எடுத்துரைக்கிறார்கள்: நான் கண் கண்ட சான்றும், மீர் சாஹிப் அவர்கள் எடுத்துரைத்ததேயாகும். எல்லாம் வல்ல அல்லாஹ் எந்த உயர்ந்த நல்லொழுக்கங்களை உருவாக்குவதற்காக, பெருமானார் (ஸல்) அவர்களின் ஊழியராக அன்னாரை அனுப்பினானோ, அந்த உயர்ந்த நல்லொழுக்கங்களைக் கடைபிடிக்கக்கூடியவர்களாக அல்லாஹ் நம்மையும் ஆக்குவானாக!

தமிழாக்கம்

முரப்பி

அத்தாவுல் முஃக்னீ

* * * * * * * * * * *

**1-ம் பக்கத் தொடர்ச்சி.... (தஃப்ஸீரே கபீர்)**

அம்ரே ஹிம்ஸ் வ யவ்முல் யர்மூக்)

இதேபோன்று, இஸ்லாம் ஆட்சியையும் ஓர் அமானிதமாக அறிவித்துள்ளது. மேலும் 'இந்த அமானிதம் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டால் அதில் ஒருபோதும் நம்பிக்கைத் துரோகம் செய்யாதீர்கள்' என்றும், அரசின் பொறுப்புகளை முழு நேர்மையுடன் நிறைவேற்றக் கூடிய நபர்களிடமே ஆட்சியின் கடிவாளத்தை ஒப்படைக்க வேண்டும் என்றும் கட்டளையிட்டுள்ளது. முஸ்லிம்கள் இந்தக் கட்டளையை மிகவும் கண்டிப்புடன் பின்பற்றினார்கள் என்று வரலாறு கூறுகிறது. (தஃப்ஸீரே கபீர் தொகுதி 8, பக்கம் 278, யூ.கே பதிப்பு) ***** ******

**ஸீரத்துல் மஹ்தி (அலை)**

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம். ஏ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

(26) பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். (எனது தாய்மாமனாராகிய) டாக்டர் மீர் முஹம்மது இஸ்மாயீல் ஸாஹிப் (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள்: 'ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் லூதியானாவில் மஸீஹ் என்ற வாதம் செய்தபோது, நானோ அக்காலத்தில் சிறு பிள்ளையாக இருந்தேன்; மேலும், மூன்றாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். இந்த வாதம் பற்றி எனக்கு எந்தத் தகவலும் தெரியாது; ஒரு நாள் நான் பள்ளிக்கூடம் சென்றேன். அப்போது, உங்கள் வீட்டில் இருக்கின்ற காதியானின் அந்த மிர்ஸா ஸாஹிப், ஹஸ்ரத் ஈஸா நபி இறந்துவிட்டார்கள் ; மேலும், வரவிருக்கும் மஸீஹ் தாம் தான் என்றும் வாதம் செய்கின்றார்' என்று சில சிறுவர்கள் என்னிடம் கூறினார்கள். டாக்டர் ஸாஹிப் கூறினார்கள்: 'நான் அதை மறுத்தேன்; மேலும், இது எப்படி முடியும்? ஹஸ்ரத் ஈஸா நபியோ உயிருடன் இருக்கின்றார்கள்; மேலும், வானத்திலிருந்து இறங்குவார்கள் என்று நான் கூறினேன். எப்படியோ, நான் வீட்டிற்கு வந்தபோது, ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் அமர்ந்திருந்தார்கள். நான் அவர்களை நோக்கி, தாங்கள் மஸீஹ் ஆவீர்கள் என்று தாங்கள் கூறுவதாக நான் கேள்விப்பட்டேன் என்று கூறினேன். டாக்டர் ஸாஹிப் கூறுகின்றார்கள்: 'எனது இந்தக் கேள்வியை செவியுற்று, ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் அமைதியாக எழுந்தார்கள்; மேலும், அறைக்குள் இருந்த அலமாரியில் இருந்து (அன்னாரின் புதிய நூலாகிய) 'ஃபத்ஹே இஸ்லாம்' என்ற தனது புதிய நூலை எடுத்து வந்து என்னிடம் கொடுத்தார்கள். மேலும், இதைப் படி! என்று கூறினார்கள்.

டாக்டர் ஸாஹிப் கூறினார்கள்: 'இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்குச் சான்றாகும்; ஏனெனில் ஒரு சிறு பிள்ளையின் சாதாரணக் கேள்விக்கு அன்னார் (அலை) இவ்வளவு தீவிரமாகக் கவனம் செலுத்தினார்களே தவிர, ஏதாவது ஒரு விஷயத்தைக் கூறி அதனை அலட்சியப்படுத்தவில்லை. (நூல் ஸீரத்துல் மஹ்தி பாகம் 1, பக்கம் 20 காதியான் பதிப்பு)

***** ******

**2-ம் பக்கத் தொடர்ச்சி .....( தலையங்கம்)**

விளக்கத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். ஆனால், அவ்வாறு அதன் பின்னரும் எவ்வகையிலும் சந்தேகம் அகலவில்லையென்றால் அத்தகைய ஹதீஸை கைவிட வேண்டும். ஏனெனில், அது கண்ணியத்திற்குரிய இறைத் தூதர் (ஸல்) அவர்களின் தரப்பிலிருந்து வந்திருக்க முடியாது.

மேலும், அன்னார் (அலை) கூறினார்கள்:

'ஒரு முன்னறிவிப்பை உள்ளடக்கிய ஒரு ஹதீஸ் இருந்து, அது ஹதீஸ் வல்லுநர்களின் பார்வையில் பலவீனமானதாக இருந்தாலும், ஒரு காலத்தில் அந்த முன்னறிவிப்பு உண்மையாகிவிட்டால், பின்னர் அந்த ஹதீஸையும் உண்மையானதாகக் கருதுங்கள். அத்தகைய முஹத்திஸ்கள் மற்றும் அறிவிப்பாளர்கள் தவறிழைத்துள்ளனர் என்று கருதுங்கள். மேலும் எவர்கள் அந்த ஹதீஸை பலவீனமானது அல்லது புனையப்பட்டது என்று கூறியுள்ளார்களோ அவர்களை பொய்யர் என்று கருதுங்கள். இத்தகைய நூற்றுக்கணக்கான ஹதீஸ்கள் உள்ளன, அவற்றில் முன்னறிவிப்புகளும் இருக்கின்றன. அவற்றில் பெரும்பாலானவை முஹத்திஸ்கள் பார்வையில் விமர்சனத்திற்குரியதாகவோ அல்லது பலவீனமானதாகவோ அல்லது புனையப்பட்டதாகவோ உள்ளன.

எனவே, அவற்றில் ஒரு ஹதீஸ் நிறைவேறிவிட்டால், அதை 'இது பலவீனமானது அல்லது புனையப்பட்டது' என்று கூறி புறக்கணிக்காதீர்கள். அவ்வாறு செய்தால், அது உங்களின் ஈமானற்ற நிலையாக இருக்கும். ஏனெனில், அந்த ஹதீஸின் உண்மைத்துவத்தை இறைவனே வெளிப்படுத்தி இருக்கின்றான்; அதனை நீங்கள் மறுக்கின்றீர்கள் என்பதே அதன் பொருள். (சுருக்கமான வாசகம் - கிஷ்தீ நூஹ்)

எனவே, ஹதீஸை எடைபோடுகின்ற வழிமுறைகள் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எடுத்துரைத்துள்ள வழிமுறைகள் இவையாகும். அன்னார் (அலை) இந்தக் காலகட்டத்தில் இறைவன் புறமிருந்து நீதிநெறி தீர்ப்பவர் என்ற முறையில் வருகை தந்துள்ளார்கள். அன்னாரால் முன்வைக்கப்பட்ட அந்த அனைத்து இறைத் தீர்ப்புகளை ஏற்றுக் கொண்டே நாம் இஸ்லாத்தின் உறுதிக்கும், நிலைத்தன்மைக்கும் உத்தரவாதமாக இருக்க முடியும். எனவே, ஹதீஸ்களை எடைபோடுவது மற்றும் அவற்றின்படி அமல் செய்வது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மேற்கண்ட இந்த வழிகாட்டுதலின்படி அமல் செய்யப்பட வேண்டும்.

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

***** ******

**ஸீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்கள்**
**நூலாசிரியர்**
**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி)**

**அரபு நாடும் அதன் குடிமக்களும் பழக்கவழக்கங்களும் சமுதாயப் பண்புகளும்**

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அரேபியர்களின் கெட்ட பழக்கங்களில் மூன்று பழக்கங்கள் மிகவும் குறிப்பிடத் தக்கவையாக இருந்தன. மது அருந்துதல், சூதாட்டம் மற்றும் விபச்சாரம். நாட்டில் இவை எந்த அளவு பெருகி இருந்தது என்றால், இறைவன் காக்கட்டும்! அதில் ஆச்சரியத்திற்குரிய விஷயம் என்னவென்றால், பொதுவாக அது பெருமையாகக் கருதப்பட்டது; இதனால் அறியாமைக் காலத்தைச் சேர்ந்த கவிஞர்கள் மிகவும் இன்புற்று தங்களது தீயச் செயல்கள் தொடர்பான தமது சாதனைகளை பாடல்களாக கூறி வந்தனர். இன்னும் கூறப்போனால், இது போன்ற விஷயங்களைக் குறிப்பிடாமல் அரபியர்களின் கவிதைகள் ஒரு பொருட்டாகவே கருதப்படாத நிலையே இருந்தது. எனவே, கவிதைகளின் தொடக்கத்தில் அவை எந்த நோக்கத்திற்காக இயற்றப்பட்டிருந்தாலும் சரியே ஒரு கவிஞர் வெளிப்படையான கூற்றுகளில் தனது உண்மையான அல்லது கற்பனை காதலியைக் குறிப்பிட்டு, அவருடனான தனது சில அமர்வுகளின் சாதனைகளைப் பாடுவது அவசியமாகக் கருதப்பட்டது.

கஅப் பின் ஸுபைர் என்ற ஒரு பிரபலமான கவிஞர் இருந்தார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் வந்து, அன்னாரைப் புகழ்ந்து ஒரு கவிதை பாடினார். அது இன்று 'பானத் சுஆத்' என்ற பெயரில் பிரபலமாக உள்ளது. அதன் தொடக்கத்திலும் கவிஞர் தன் காதலியின் பிரிவை எண்ணி அழுதார். நாணமின்மையின் நிலை எவ்வாறாக இருந்தது என்றால், சில சமயங்களில் முதலாளிகளே தங்களின் பெண் அடிமைகளை விபச்சாரத்தில் ஈடுபடுத்தி, அதன் மூலம் வரும் வருமானத்தை வசூலித்து வந்தனர். இதுவும் ஒருவகையில் வருமானம் ஈட்டும் வழிமுறையாக இருந்தது; ஆனால் கண்ணியமானவர்களின் வாழ்க்கை இதுபோன்ற வெட்கக்கேடான செயல்களிலிருந்து முற்றிலும் தூய்மையானதாக இருந்தது.

அறியாமையும், கட்டுப்பாடற்ற கோபமும் அரேபியாவில் எந்தளவுக்கு இருந்தது என்றால், மிகச் சிறிய விஷயத்திற்காகக் கூட வாள்கள் வீசப்பட்டன. சில சமயங்களில் ஒரு சிறிய தகராறால் இரு கோத்திரங்களுக்கிடையே போர் தொடங்கி, பின்னர் மெது மெதுவாக மற்ற கோத்திரங்களும் அதில் பங்கெடுத்து விடுவர். மேலும், பல ஆண்டுகள் வரை கொலையும், கொள்ளையும் தொடர்ந்து கொண்டிருந்தன என்று வரலாற்றிலிருந்து தெரிய வருகிறது. கீழ்வரும் சம்பவம் அரபு வரலாற்றின் ஒரு சாதாரணப் பக்கமாகும்.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில், குலைப் பின் ரபீஆ மிகவும் சக்திவாய்ந்த மற்றும் செல்வாக்கு மிக்கத் தலைவராக இருந்தார். இவர் அரேபியாவின் வட கிழக்கில் வசித்து வந்த பனூ தக்லிப் பின் வாயில் என்ற கோத்திரத்தின் தலைவராக இருந்தார், குலைப்பின் மனைவி ஹலீலா பின்த் முர்ரா, பனூ பக்ர் பின் வாயில் கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தார்.. இந்த ஹலீலாவிற்கு ஜஸ்ஸாஸ் என்ற ஒரு சகோதரன் இருந்தான், அவன் தன் சித்தி பஸூஸுடன் வசித்து வந்தான்.

அப்போது, தற்செயலாக பஸூஸிடம் ஸஅது என்ற ஒரு விருந்தாளி வந்தான். அவனிடம் 'சரப்' என்ற பெயருள்ள ஒரு பெண் ஒட்டகம் இருந்தது. உறவுமுறையின் காரணமாக, அது ஜஸ்ஸாசின் வயலில் அவருடைய ஒட்டகங்களுடன் சேர்ந்து மேய்த்து கொண்டிருந்தது. ஒரு நாள், குலைப் ஒரு மரத்திற்கு கீழே சென்று கொண்டிருந்தபோது, மரத்தின் உச்சியில் ஒரு பறவையின் சத்தம் கேட்டது. குலைப் மேலே நிமிர்ந்து பார்த்தபோது, ஒரு பறவை அந்த மரத்தில் கூடு கட்டி அதில் முட்டையிட்டிருப்பது தெரிய வந்தது. குலைப் அந்தப் பறவையைப் பார்த்து, யாரைக் கண்டும் பயப்படாதே, நான் உன்னைப் பாதுகாப்பேன் என்று கிராமப்புறப் பாணியில் கூறினார். (தொடரும்........)

(நூல் ஸீரத் காத்தமுன் நபிய்யீன், மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம்.ஏ, பக்கம் 53 - 55)

***** ******

*திருக்குர்ஆனிலிருந்து...*

அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன
(13:29)

A. Khaleel Ahmad
( Melapalayam)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 13 AUG 2026 Issue No. 33

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) **அவர்களின் ஆஸ்திரேலிய சுற்றுப் பயணம் - 2013**

**நேஷனல் மஜ்லிஸே ஆமிலா உறுப்பினர்களுடன் சந்திப்பு**

**(அறிக்கை அப்துல் மஜீத் ஸாஹிப் தாஹிர்)**

**சென்ற இதழின் தொடர்ச்சி.......**

அஹ்மதி அல்லாத விருந்தினர்கள் அழைக்கப்படும் ஒரு நிகழ்ச்சியில் அல்லது Reception-ல் நமது பெண்கள் அந்த விருந்தினர்களுடன் கலந்து கொள்வதில்லை என்ற விஷயத்தை சில விருந்தினர்கள் தெரிவிக்கின்றார்களே? என்ற கேள்விக்கு பதிலாக ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

ஒரு விஷயம் என்னவென்றால், வரும் விருந்தினர்கள் நமது கலாச்சாரத்தை அறிந்திருக்க வேண்டும். அடுத்து, எவர்களுடன் ஏற்கனவே தொடர்பு இருக்குமோ அவர்களே அழைக்கப்படுகின்றார்கள். எனவே அவர்களிடம் தெரிவித்து விட வேண்டும். இரண்டாவது விஷயம், எந்தப் பெண்கள் விருந்தினர்களை அழைத்துக் கொண்டு வருகின்றார்களோ, அவர்களுக்கு ஹாலின் பின் பகுதியில் ஒரு மூலையில் குறிப்பிட்ட இடத்தை ஒதுக்கி ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அவர்கள் தங்களின் முழுமையான மறைப்பான உடையுடன் (அதாவது பர்தாவுடன்) தமது விருந்தினர்களுடன் அமரலாம். ஆனால் உணவு உண்பதற்கு தனியாக பர்தாவுடன் இடம் இருக்க வேண்டும்; அங்கு சென்று அவர்கள் உணவு அருந்துவார்கள். எனவே, நிகழ்ச்சி என்ற அளவு வரை ஒரு மூலையில் அமர்ந்திருப்பது சரிதான்; ஆனால், மற்றபடி அரட்டை அடிப்பதற்கும் அனுமதி கிடையாது; மேலும், அங்கு அமர்ந்து உணவு உண்பதற்கும் அனுமதி இல்லை. உணவு உண்பதற்கு பர்தாவுடன் கூடிய தனி இடம் இருக்கும்.

நேஷனல் செக்ரட்டரி உமூரே ஆமா (National Secretary General Affairs) அவர்களிடம், உங்களுடைய பணிகள் என்ன? என்று ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வினவினார்கள். அதற்கு அவர் கூறினார்: மூன்று பணிகளை உள்ளன. முதலாவது என்னவென்றால், ஜமாஅத் மக்களின் நலனும், முன்னேற்றமும். அப்போது, ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ‘இதுவே அசல் பணியாகும்; தகராறுகள் மற்றும் சண்டை சச்சரவுகளைத் தீர்ப்பது மற்றும் மூன்றாவது பணி பாதுகாப்பு அம்சத்துடன் தொடர்புடையதாகும்.

செக்ரட்டரி தர்பிய்யத் (Secretary Tarbiyat) கூறினார்: தற்போது உமூரே ஆமாவிடம் 8 சண்டை சச்சரவு விவகாரங்கள் நிலுவையில் உள்ளன ; இதில் ஒன்று, அதாவது மார்க்க விவகாரமாகும். மற்றவை கணவன்-மனைவிக்கு இடையிலான குடும்பப் விவகாரங்களாகும். இதைக் கேட்ட ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: தர்பிய்யத் துறை சுறுசுறுப்பாக இயங்கினால் அனைத்து விவகாரங்களும் சரியாகிவிடும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தொடர்ந்து கூறினார்கள்: நாம் ஏன் அஹ்மதிகளாக இருக்கின்றோம்? என்பதையும், மேலும், நமது பொறுப்புகள் என்ன? என்பதையும் ஒவ்வொருவரையும் Realise செய்ய வைப்பது அவசியமாகும்; மற்றவர்களுக்கு முன்னால் நமது நடத்தை எவ்வாறு இருக்க வேண்டும்? இந்தச் சமூகத்தின் சுதந்திரத்திலேயே நாம் தொலைந்து போய்விடக் கூடாது.

தமது அறிக்கையைச் சமர்ப்பித்தவாறு, ‘நமது வாக்ஃபீன்களின் மொத்த எண்ணிக்கை 442 ஆகும் என்று நேஷனல் செக்ரட்டரி வக்ஃபே நவ் (National Secretary Waqf-e-Nau) கூறினார். அதில் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கை 277 ஆகும். மேலும், பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை 165 ஆகும். 15 வயதுக்கு மேற்பட்ட வாக்ஃபீன்களின் எண்ணிக்கை 174 ஆகும். அவர்களில் 171 பேர் தங்களது ’வக்ஃபை புதுப்பித்துள்ளனர். இதைக் கேட்ட ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் எந்த 3 பேர்கள் புதிப்பிக்கவில்லையோ அவர்களின் பெயர்களை அனுப்பி, அவர்களைப் விடுவித்து விடுங்கள் என்று கூறினார்கள்.

நேஷனல் செக்ரட்டரி கல்வி (National Secretary Education) அவர்களுக்கு வழிகாட்டுதல் வழங்கியவாறு, ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: குத்தாமுல் அஹ்மதிய்யா உடன் இணைந்து அஹ்மதிய்யா மாணவர் அமைப்பை (Student Association) ஒருங்கிணைக்க வேண்டும். இந்த அமைப்பை பல்கலைக்கழகங்களில் உருவாக்க வேண்டும். முஃதமிம் உமூரே துலபாவின் மூலமாக குத்தாமுல் அஹ்மதிய்யா இதை நிர்வகிக்கலாம்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மேலும் கூறினார்கள்: ‘உங்களிடம் 332 மாணவர்கள் மேல்நிலைக் கல்வியை முழுமை செய்ய இருக்கின்றனர். அவர்கள் அடுத்து என்ன செய்ய வேண்டும்?, எந்தப் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? என்பது தொடர்பாக அவர்களுக்கு ஆலோசனைகள் (Counselling) வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். உங்கள் மாணவர்களை ஒருங்கிணையுங்கள்; மேலும், ஓர் அமைப்பின் கீழ் வெவ்வேறு துறைகளுக்கு அவர்கள் செல்ல வேண்டும்; மேலும், ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களுக்கு வழிகாட்டல் வழங்க வேண்டும்.

நேஷனல் சொத்து செக்ரட்டரி (National Secretary Properties) அவர்களுக்கு வழிகாட்டல் வழங்கியவாறு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஒரு குழுவை அமைத்து, விவசாயம் செய்யக் கூடிய நிலங்கள் எங்கு கிடைக்கின்றன? மேலும் அங்கு தண்ணீர் வசதியும் கிடைக்குமா? என்பதை ஆய்வு செய்யுங்கள். மேலும்,100 முதல் 150 ஏக்கர் நிலத்தில் ஒரு குடும்பம் சென்று குடியேறக் கூடிய பகுதியை ஆய்வு செய்யுங்கள். சில பகுதிகள் அதிக மழை பெய்யும் பகுதிகளாகும்; நதிக் கரையை ஒட்டிய பகுதிகள் உள்ளன ; இங்கு நிலம் கிடைக்குமா? மேலும், தண்ணீரைப் பயன்படுத்த அனுமதி உள்ளதா? இல்லையா? என்று அங்கு ஆய்வு செய்ய வேண்டும்.

சொத்துச் செயலாரையும், தொழில் வணிகச் செயலாளரையும், மேலும், சில தொழில்நுட்ப வல்லுநர்களையும் சேர்த்து ஒரு கமிட்டியை அமையுங்கள். அந்தக் கமிட்டி இந்த அனைத்து விவகாரங்களையும் ஆய்வு செய்து, பின்னர் முழுமையான திட்டத்தை அனுப்ப வேண்டும். மேலும், நாட்டின் சட்டங்கள் மற்றும் குடியேற்றம் (Immigration) சட்டங்களின்படி வெளிநாட்டிலிருந்து நபர்கள் இங்கு வந்து விவசாயம் செய்ய முடியுமா? என்னென்ன விதிகள் மற்றும் சட்டங்கள் உள்ளன? விசா போன்றவை கிடைத்து விடுமா? என்பதையும் இந்தக் குழு ஆய்வு செய்ய வேண்டும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சமூகத்தில் இவ்வாறு கூறப்பட்டது: ‘சிட்னியில் நமது 4 ஜமாஅத்கள் உள்ளன, இப்போது அங்கு இரண்டாவது பள்ளிவாசல் கட்ட வேண்டிய தேவை உள்ளது‘ என்று கோரிக்கை வைக்கப்பட்டது.

அதற்கு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ‘சிட்னியில் இரண்டாவது பள்ளிவாசலைக் கட்டுங்கள்; மிகவும் பெரிதாக கட்ட வேண்டாம். உங்களது மஜ்லிஸ் ஆமிலாவைக் கூட்டி தீர்மானியுங்கள்.‘ஆஸ்திரேலியாவிலும் ஒரு ஜாமிஆ கட்டப்பட வேண்டும்; மேலும், பசிபிக் நாடுகளிலிருந்தும் மாணவர்கள் இங்கு வரட்டும் என்ற ஆலோசனை ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சமூகத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த யோசனையை ஆய்வு செய்து, முழுமையான சாத்தியக்கூறு அறிக்கையை (Feasibility Report) தயாரித்து அனுப்புமாறு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள். எத்தனை வாக்ஃபீனே நவ் மாணவர்கள் ஜாமிஆவில் சேர விரும்புகிறார்கள் என்றும் பாருங்கள்! ஒவ்வோர் ஆண்டும் எத்தனை பேர் சேருவார்கள்? 2, 3 பேர் மட்டுமாக இருந்தால் இது Feasible இல்லை. (இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்....)

தமிழாக்கம்
முரப்பி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * * *

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad